சைவமித்திரன்

26-7-1934

72
34.7 1
208717

693

ரு. 3 Regd. No. M. 2419.



OFFICE OF THE REGISTRAR
7-AUG 1934
MADRAS

# மாத்வ மித்திரன்.

# THE MADHWA MITRAN.

EDITOR:
Adyam Bhagavatha Ranganathachariar,
*Kumbakonam.*

பௌர்ணமிதோறும் வெளிவரும்.



| | | |
|---|---|---|
| Vol. 7 | பாவ ஸம்வத்ஸரம் ஆஷாட மாஸம். | No. 1. |
| புஸ்தகம் 7 | பௌர்ணமி (26—7—34.) குருவாரம் | நெ 1. |



நெ. — பொருளடக்கம். பக்கம்.



| | | |
|---|---|---|
| 1. | *ஸ்ரீ தாத்பரிய நிர்ணயம் (ஸ்ரீமத்வாசாரியார்)* | 1 |
| 1. | *ஸ்ரீவாதிராஜாஸ்வாமிகள் சரித்திரம்* | 9 |
| 3. | *ஸ்ரீமத்வ விஜயம். (ஸ்ரீநாராயண பண்டிதாசாரியார்.)* | 13 |
| 4. | *ஸ்ரீபீமசேன விஜயம்.* | 18 |
| 5. | *ஆசாரமாலை.* | 21 |
| 6. | *சங்கரலீலா விலாஸம் (ஸ்ரீமான் H. சுப்புராவ்).* | 25 |
| 7. | *எமது மித்திரனின் ஏழாவது வருடாரம்பம்.* | 29 |
| 8. | *மகாலட்சுமி.* | 29 |
| 9. | *விசேஷதினங்கள்.* | 32 |



ஆசிரியர்:— ஆத்யம் பாகவத ரங்கநாதாசாரியார், கும்பகோணம்.

# கக்குவான் இருமல்.

இதை 12 நாளிலேயே குணப்படுத்துவதான டாக்டர் பேரியாராவின் ஹூபிங் காப் ஸ்பெஸிபிக் இருக்கையில் 3மாதகாலம் உங்கள் குழந்தை வருந்தும்படி விடாதீர்கள், ஓர் பாட்டில் ரூ. 2—12—0

ஆஸ்த்மா க்யோர் இதரமருந்துகள் உபயோகமில்லாமற் போகுமாகில் காசத்திற்கு இதுதான் கைகண்ட மருந்து. ஓர் பாட்டில் ரூ. 4—8—0

ஆன்டிடயாபிடின் இது நீரழிவை நிச்சயமாய் 6மாதத்திற்குள் சொஸ்தப்படுத்தும். ஓர் டின் ரூ. 4—12—0

ஆர்டருடன் ரூ. 2-ஐ மணியார்டராகவோ ஸ்டாம்பாகவோ அனுப்பவும்.

PEREIRA & Co., Chemists No. 13, Calicut. (S India)

---

## மாத்வமித்திரன்.

மாத்வர்களின் சாஸ்திரீயமான தமிழ் பத்திரிகை இது ஒன்றே ஸ்ரீமத்வமதத்தின் அரிய இரகசியங்கள் ஸம்பிரதாயங்கள் மாஸமாகாத்மியங்கள் புராணசரிதைகள் மாத்வவகுப்பு புண்ய புருஷர்களின் சரித்திரங்கள் வேதாந்த சர்ச்சைகள் தர்மசாஸ்திர விசாரகைள் தினசரி விரதாதி குறிப்பு:— மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான அநேக கிரந்தங்களின் மொழி பெயர்ப்புகள் முதலிய எண்ணிறைந்த விஷயங்கள் நிறைந்திருக்கின்றன. ஸ்ரீமத்வமதத்தை சுலபமாய் அறிந்துகொள்ள இப்பத்திரிகைக்கே உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள். இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது. இதற்கு வருடசந்தா முன்பணமாய் ரூபாய் மூன்று. பிரதி சிராவணமாதமும் இப்பத்திரிகைக்கு வருடஆரம்பமாகும். எந்த மாதத்தில் சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் அந்த வருஷத்திய பிந்திய சஞ்சிகைகள் அனுப்பப்படும். பழைய வால்யங்கள் விலைக்குக் கிடைக்கும். பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்த ஒருவாரத்துக்குள் நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும். பதிலறிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும். ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் பூரா மேல் விலாசமும் எழுதி அனுப்பவேண்டும்.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்

---

## மாத்வமித்திரன் பழைய வால்யங்கள் வெகு சொற்பம் தானிருக்கின்றன. உடனே அவைகளைப்பெற முந்துங்கள்.


ஸ்ரீலக்ஷ்மீநரஸிம்ஹாயநம:

# மாத்வமித்திரன்.

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्य जगत् , तत्वतः भेदो
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

---

ஸ்ரீமத்வாசாரியார் இயற்றிய

## ஸ்ரீமகாபாரத தாத்பர்ய நிர்ணயம்.

(இருபதாவது அத்யாயம்)

(ஸ்ரீம. வே. பாகவத ரங்கநாதாசாரியாரின் மொழி பெயர்ப்பு.)

(காபிரைட், முன் தொடர்ச்சி.)

---

பிறகு ஸ்ரீகிருஷ்ணர் தன்னுடைய ரதத்தை அர்ஜுனனுக்காக துவாரகையில் நிறுத்திவைத்து அன்றிரவே பிண்டோத்தார தீர்த்தத்திற்கு பிரயாணம் செய்தார். இந்திரபகவானும் ஸ்வர்க்கலோகம் புறப்பட்டுப்போனபின், அர்ஜுனன் ஸுபத்ரையுடன் சேர்ந்து மறுநாள் காலையில் ஸ்ரீகிருஷ்ணருடைய கருடத்வஜ ரதத்தில் ஏறிக்கொண்டான். எல்லா ஆயுதங்களும் நிறைந்திருந்த ரதத்தில் அர்ஜுனன் தனுஸ்ஸைப் பிடித்துக்கொண்டு உட்காரவும், என்ன இது! என்ன இது! இந்த த்ரிதண்டி ஸந்யாஸி தனுஸ்ஸை தரித்து கன்னிகையை எடுத்துப் போகிறானே என்று துவாரகையில் கூக்குரல் உண்டாயிற்று. பிறகு அந்நகரின் காவலாளிகள் கவசம் தரித்து மகேந்திரன் கொடுத்த தேவலோகத்து கர்ணகுண்டலங்களையும் வஸ்திரங்களையும் ஆபரணங்களையும் போட்டுக்கொண்டிருந்த அர்ஜுனனைப் பார்த்திருந்தனர். உள்ளங்கைக்கும் விரல்களுக்கும் ரக்ஷகமாய் உடம்பு தோலால்

ஓ8717

செய்த கை உறைகளைப் போட்டுக் கொண்டு அம்பராத்துணிகளுடன் [illegible], தனுஸ்ஸுக்கு நாண்கட்டி அதை வளைத்து [illegible]றும் விடப்பட்ட பாணங்களால், தன் வித்யாப்யாஸம் சிக்ஷை இவைகளைக் கொண்டு ஆகாசம் திக்கு விதிக்குகளை இடைவெளியில்லாமல் செய்தான். அர்ஜுனனுக்கு ஸாரதித் தொழிலைச் செய்வதற்காகவே ஸாரத்யத்தில் ஸ்ரீகிருஷ்ணரால் நன்கு சிக்ஷை பெற்றவளான ஸுபத்ரை, அப்பொழுது அர்ஜுனனுடைய ரதத்திற்கு ஸாரதியாய் இருந்தாள். தன் பந்துஜனங்களை கொல்லலாகாதென்று அவர்களால் தடுக்கப்பட்ட அர்ஜுனன் விளையாட்டை காட்டிக்கொண்டு, அதி ஆச்சரியமானசரியான சிக்ஷையால் எல்லா யாதவர்களையும் பயமுறுத்தி, பாணங்களால் அவர்களை விரட்டியடித்து, அந்த ஸைனியத்தில் ஒருவனுக்கும் மேல் தோல்கூட வழண்டுபோனதாய்ச் செய்யவில்லை. துவாரகையிலிருந்து புறப்பட்டு அர்ஜுனன், பலராமரால் அந்த துவாரகையின் காவலாளியாய் ஏற்படுத்தியிருந்த விபிருது என்ற யாதவனைக் கண்டான். விபிருது பலராமருக்கு பிரியத்தைச் செய்பவன்போல் கபடமாய் தன் ஸைனியத்தால் அர்ஜுனனை வளைத்துக்கொண்டான். ஆனால் ஸ்ரீகிருஷ்ணரின் ஆக்ஞையின்பேரில் அர்ஜுனனை நன்றாய் தடுக்கவில்லை, விபிருது கபடமாய் யுத்தம் செய்தான். அவன் 49 மருத் தேவதைகளில் ஒருவனான ஸௌம்யன் என்ற மருத்து, ஸ்ரீகிருஷ்ணரின் ஸேவையின் பொருட்டு பிறந்தான். அவனுடைய சரீரத்தில் காயம் ஏற்படாதபடி அவன் மீது பாணங்களை விருஷ்டி செய்தான். அவனை ஆயுதம் ரதமில்லாதவனாய்ச் செய்தான். ஆனால் அவனுடைய ஸைனியத்தைக் கொல்லவில்லை. அர்ஜுனனுடைய பாணங்கள் க்ரூரமாய் இருந்தாலும் மேல் தோலைகூட சேதிக்கவில்லை. இவ்வகையான அர்ஜுனனுடைய சிக்ஷையைப் பார்த்து விபிருது சந்தோஷப்பட்டான். யுத்த ஆரம்பத்திலேயே அர்ஜுனனால் ஆயுதங்கள் சேதிக்கப்பட்டுபோன, விபிருது அவனுடைய விசேஷமான வித்யாப்யாஸத்தை மரியாதை செய்பவனாய், முஷ்டி யுத்தம் செய்பவன்போல் அவனுடைய சமீபத்தில் வந்து, ஸ்ரீகிருஷ்ணர் தனக்கு ஆக்ஞையிட்டிருப்பதை எல்லாம் அவனிடம் சொன்னான். பிறகு



அவன் அர்ஜுனனால் தோற்றுப் போனதுபோல் அங்கிருந்து புறப்பட்டு, சீக்கிரமாய் பிண்டோத்தார தீர்த்தத்திற்கு போய் பலராமரிடம் இந்த எல்லா ஸமாசாரத்தையும் சொன்னான். பிறகு பலராமர், ப்ரத்யும்னன் ஸாம்பன் முதலான எல்லா யாதவர்களுடன் சேர்ந்து, அர்ஜுனனைக் கொல்ல விருப்பங்கொண்டு, கோபத்துடன் துவாரகை வந்து சேர்ந்தார். ஸ்ரீகிருஷ்ணர் விபிருதுவால் எல்லா விருத்தாந்தத்தையும் கேட்டு ஸுதர்மை என்ற யாதவசபைக்கு வந்து, மனஸ்தாபம் அடைந்தவர்போல் குனிந்துகொண்டு உட்கார்ந்தார். அச்சபையில் ப்ரத்யும்னன் முதலான யாதவவீரர்கள் கூக்குறல் போட்டுக்கெகாண்டு உரக்கப்பேசினர். கபடஸன்யாஸியாய் வந்த அர்ஜுனனை நாம் சீக்கிரம் கொன்று ஸுபத்ரையை ஓர் க்ஷணத்தில் கொண்டு வருகிறோம். என்றிவ்வாறு பேசிய யாதவர்களைப் பார்த்து பலராமர் சொன்னதாவது, நீங்கள் ஸ்ரீகிருஷ்ணரின் ஆக்ஞையை பெற்று யுத்தத்திற்கு செல்லுங்கள். உங்கள் இஷ்டப்படிமட்டில் செல்லாதீர்கள். முதலில் ஸ்ரீகிருஷ்ணரின் அபிப்பிராயத்தை தெரிந்துகொள்ள வேண்டும். அவருடைய சம்மதிக்கு விரோதமாய்ப்போனால் உங்களுக்கு ஜயம் உண்டாகாது, என்றிவ்வாறு பலராமர் சொல்லவும் எல்லா யர்தவர்களும் ஸ்ரீகிருஷ்ணரை நமஸ்கரித்து அர்ஜுனனுடன் யுத்தத்திற்கு செல்வதா வேண்டாமா என்று கேட்டனர். அபரிமித சக்தியுள்ள ஸ்ரீகிருஷ்ணர் பிறகுபேசினார். என்னவென்றால் யாதவர்களே! நீங்கள் எல்லோரும் என் வார்த்தையைக் கேளுங்கள். கபடமான ஸன்யாஸ வேஷமுள்ள இந்த புருஷன் கன்னிகையின் சமீபத்தில் இருக்கலாகாதென்று நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். நான் அநேக தோஷங்களை எடுத்துச் சொல்லியும் என் தமையனாரான பலராயர் என் வார்த்தையை கிரகிக்கவில்லை. கபடமான எண்ணங்கொண்ட ஸன்யாஸியை கன்னியாமடத்தில் இருக்கச் செய்வதில் தமையனாரின் வாக்யத்தை மீறலாகாதென்று நான் தமையனாரை அனுஸரித்தேன். காரியமோ மீறி நடந்துபோய் விட்டது. நாம் இல்லாத ஸமயத்தில் தான் எங்கள் கன்னிகையான ஸுபத்ரையை அர்ஜுனன் கொண்டுபோயிருக்கிறான். இந்த விஷயத்தில் எங்களுக்கு மான

பங்கமொன்றுமில்லை. தான் வீரன் என்று அகங்காரம் கொண்ட அர்ஜுனனுக்குத்தான் விசேஷமாய் மானம் போகும். விபிருதாவின் வாக்யத்தால் அந்த ஸன்யாஸி அர்ஜுனன் என்று எமக்குத் தெரியவருகிறது. கன்னிகையை வேறொருவருக்கு நாம் தானம் செய்ய வேண்டியதுதான். அர்ஜுனனுக்கு ஒப்பான மாப்பிள்ளையோ எங்களுக்கு வேறு யாருமில்லை. அர்ஜுனன் குரு வம்சத்தில் பிறந்தவன். மிக்க பூர்ண ஸாமார்த்தியமுள்ள ஸ்ரீவேத வியாஸருடைய பேரன். எமது அத்தை பிள்ளை, மகாவீரன், குணமுள்ளவன், நாம் சுபாவமாகவே அவனைப் பிரார்த்திக்க வேண்டியது. அப்பேர்ப்பட்ட இந்திரபுத்திரனை அர்ஜுனன் தானாகவே ஸுபத்திரையை எடுத்துப்போயிருக்கிறான். அதனால் எங்கள் காரியம் கெட்டுப்போகவில்லை. நீங்கள் அவனுடைய பின்னாடிபோய் அவனைத்துறத்தி யுத்தம் செய்து அவன் உங்களை தோற்றுப்போகும்படி செய்து விட்டால், உங்கள் பெயர் கெட்டுப் போகும். அப்படி இல்லாமல் நீங்கள் கஷ்டப்பட்டு அர்ஜுனனை ஜயித்து பெண்ணை அழைத்து வரும்பக்ஷத்தில், அவன் தொட்ட அந்தப்பெண்ணை யாரும் மணக்க விரும்பமாட்டான். ஆகையால் நீங்கள் அர்ஜுனனின் பின்னாடி யுத்தத்திற்கு செல்வது எனக்கு பிடிக்கவில்லை, என்று சொல்லி ஸ்ரீகிருஷ்ணர் வாயை மூடிக் கொண்டார். இந்த கிருஷ்ண வாக்யத்தைக்கேட்டு பலராமர் "நீங்கள் யுத்தத்திற்குச் செல்லாதீர்கள். ஸ்ரீகிருஷ்ணரின் மனோ அபிப்பிராயம் எனக்குத் தெரிந்தது. இவனை அனுஸரிப்பதுதான் எங்கள் ஜயத்திற்கும் க்ஷேமத்திற்கும் காரணமாகும் என்று சொன்னார்." அர்ஜுனன் எதில் உட்கார்ந்தால் எவனும் ஸ்ரீகிருஷ்ணரின் ஆக்ஞையால் பராஜயமடையமாட்டானோ, அப்பேர்ப்பட்ட ரதத்தில் உட்கார்ந்து, ஸுபத்ரா தேவியுடன்கூடி இந்திர ப்ரஸ்தம்போய்ச் சேர்ந்தான். அண்ணன் தம்பிகளால் பாதுகாக்கப்பட்டு வரும் இந்திர ப்ரஸ்தத்திற்குள் ப்ரவேசம் செய்தான். மிகவும் சந்தோஷப்பட்ட அண்ணன் தம்பிகளால் மரியாதை செய்துகொண்ட அர்ஜுனன் பிறகு தன் ஸோதரர்களிடம் ஸ்ரீகிருஷ்ணர் செய்த எல்லா காரியங்களையும் சொன்னான். ஸ்ரீகிருஷ்ணரும் பிறகு தன் பேச்சால் யாதவர்களின்



கோபத்தை தணித்த பின் பலராமருடன் சேர்ந்து நவரத்னங்கள் நிறைந்த வண்டிகளுடன், இந்திர ப்ரஸ்தத்திலிருந்த பாண்டவர்களிடம் வந்து சேர்ந்தார். அங்கு பாண்டவர்களால் பூஜிக்கப்பட்ட ஸ்ரீகிருஷ்ணர் பலராமருடன் சேர்ந்து பாண்டவர்களுக்கு அந்த ரத்னங்களைக் கொடுத்தார். அவ்வாறே துரௌபதிக்கும் தங்கையான ஸுபத்ரைக்கும் ஆபரணங்களைக் கொடுத்தார். பலராமர் சில மாதகாலம் இந்திர ப்ரஸ்தத்தில் வாசம் செய்துவிட்டு பிறகு துவாரகைக்கு போய் சேர்ந்தார்.

துரௌபதிக்கு முறையே சித்ரரதன், அபிதாம்பிரன், கிசோரன், கோபாலன், பாலன் என்னும் ஐந்து கந்தர்வ சிரேஷ்டர்களின் ஆவேசம் கொண்டிருந்த ஐந்து விச்வேதேவர்கள் குணஸம்பன்னர்களான ஐந்து பிள்ளைகளாய்ப் பிறந்தனர். துரௌபதியிடம் யுதிஷ்டிரரால் ப்ரதிவிந்தயன் என்ற பிள்ளையும், பீமசேனரால் ச்ருதஸோமன் என்ற பிள்ளையும், அர்ஜுனனால் சுருதகீர்த்தி என்ற பிள்ளையும், நகுலனால் சுருதானிகன் என்ற பிள்ளையும், ஸகதேவனால் சுருதக்ரியன் என்ற பிள்ளையும், ஆக இவ்வாறு பெயருள்ள ஐந்து பிள்ளைகள் யுதிஷ்டிராதிகளுக்கு பிறந்தனர். இவ்வாறு ஐந்து பிள்ளைகளில் பிரதிவிந்தியன் சுருதஸோமன் பிறந்த பிறகு, அர்ஜுனனுக்கு ஸுபத்திரையிடம் அபிமன்யு என்ற பிள்ளை பிறந்தான். இந்த அபிமன்யு முன்பு புதன். சந்திரனுடைய அம்சம் விசேஷமாய் பெற்றவன். மேலும் யமன், வாயுபகவான், இந்திரன், அசுவினி தேவர்கள் இவர்களின் அம்சங்களையும் பெற்றவனும், ஸ்ரீகிருஷ்ணரின் விசேஷ ஆவேசம் பெற்றவனும், ஸுபத்ரையின் வயிற்றில் அர்ஜுனனால் பிறந்தான். இந்த ஆறு குமாரர்களும் வீரியமுள்ளவர்கள். நல்ல ரூபமுள்ளவர்கள். விஷ்ணு பக்தர்கள். எல்லா சாஸ்திரங்களிலும் பரிசயமுள்ளவர்கள். பாண்டவர்கள் இந்த பிள்ளைகளால் சந்தோஷமடைந்தனர். ஸுபத்ரையின் மகனான அபிமன்யுவால் விசேஷமாய் சந்தோஷப்பட்டனர்.

## காண்டவவன தகனம்.

ஒரு ஸமயம் ஸ்ரீகிருஷ்ணார்ஜுனர்கள் கிரீடை செய்ய பிரியப்பட்டு, ஸத்யபாமை ஸுபத்ரை இவர்களை அழைத்துக்

கொண்டு, கந்தர்வ ஸிரேஷ்டர்கள் பாட்டுப்பாடவும், ரதத்தில் ஏறிக்
கொண்டு, ஸேவகர்களுடன் சேர்ந்து காண்டவம் என்ற வனத்
திற்குச் சென்றனர். மந்தமாருதம் வீசுவதாயும் புஷ்பக்கொத்து
களால் விசேஷமாய் விளங்குவதாயுமுள்ள யமுனையின் கரை
யோரத்திலுள்ள வனத்திலும், சூரியனின் புத்ரியான யமுனையின்
ஜலத்திலும், ஸ்திரீரத்னங்களுடன் சேர்ந்து ஸ்ரீகிருஷ்ணார்ஜுனர்
கள் இஷ்டப்படி க்ரீடித்திருக்கும் பொழுது அக்னிபகவான்
பிராம்மண ரூபமெடுத்துக்கொண்டு ஸ்ரீகிருஷ்ணார்ஜுனர்களிடம்
வந்து தனக்கு அன்னம் வேண்டுமென்று யாசித்தார். அப்பொ
ழுது அர்ஜுனன் ஸ்ரீகிருஷ்ணரின் அனுமதியின்பேரில், ஹே
ப்ராம்மணா! உனக்கு எந்த வகை அன்னம் வேண்டும் என்று கேட்
டான். அதற்கு அந்த ப்ராம்மணன் சொன்னதாவது நான் அக்
னியே. இந்த காண்டாவ வனத்தைக் கொளுத்த விரும்பு
கிறேன். நான் முன்பு தேவர்களைப் பார்த்து, தேவர்களே! உங்
களுக்கு நான் இதராள் கொடுக்கும் ஹவிஸ்ஸைக்கொணர்ந்து தரு
கிறேனே! அதற்காக எனக்கு சம்பளமாய் எனக்கு ப்ரயாஜேஷ்டி,
அனுயாஜேஷ்டி இவைகளைத் தாருங்கள் என்று கேட்டுக்
கொண்டேன். அவர்கள் என்னைப்பார்த்து கோபித்துக்கொண்டு
நீர் எங்களை சம்பளம் கேட்டதால், உம்முடைய பலம் குறையட்
டும் என்று எனக்கு சாபம் கொடுத்தனர். ஆயினும் பிறகு
எனக்கு ப்ரயாஜம் அனுயாஜம் என்ற ஆஹுதிகளைத்தந்தனர்.
நான் பிறகு சதுர்முகனிடம் சென்று அவரை நமஸ்கரித்து, என
க்கு நஷ்டமாய்ப்போன என் பலம் எப்படி பூர்ணமாகுமென்று
அவரைக்கேட்டேன். அதற்கு அவர் நீ எப்பொழுது காண்டவ
வனத்தை பக்ஷிக்கிறாயோ அப்பொழுது முன்போல் உனக்கு
பலம் வந்து சேரும் என்று சொன்னார். இந்த காண்டவ வனமோ
மகேந்திரனைச் சேர்ந்தது. ஆதலால் நான் இந்த காண்டவ
வனத்தை தகித்தால் அதற்கு அவர் இடையூறு செய்கிறார்.
ஆகையால்தான் உங்களை நான் ப்ரார்த்திக்கிறேன். என்றிவ்வாறு
அக்னிபகவான் சொல்லவும், அர்ஜுனன், அக்னியே! எனக்கு
ரதத்தையும், தனுஸ்ஸையும் நீங்கள் கொண்டுவந்து கொடுத்
தால் பிறகு நான் இந்திரன் இடையூறு செய்வதை தடுக்



கிறேன் என்று அக்னியைப் பார்த்துச் சொன்னார். அர்ஜு
னனிடம் நரனுடைய ஆவேசமிருந்ததாலும், அன்னதா
னம் செய்வதாய் அவன் வாக்குத்தத்தம் செய்துவிட்டதாலும்,
அவனுக்கு ஸ்ரீகிருஷ்ணருடைய தூண்டுதலிலிருந்ததாலும், இந்
திரன் தன் மூலரூபமாய் இருந்தாலும்கூட அவனுடைய விரோ
தத்தை விரும்பினான். இந்திரனின் விரோதம் தனக்கு இருக்க
லாகாது என்றுதான் அக்னி அர்ஜுனனை ப்ரார்த்தித்தார்.
இந்திரன் சுயம் தான் ஒருவருக்கு ஓர் வஸ்துவை கொடுத்து
விட்டால் அதன் சம்பந்தமாய் அவரிடம் துவேஷம் செய்ய
மாட்டான். இந்திரன் இந்த வனத்தை எப்படிக் கொடுத்த
தாய் ஆகுமென்றால் இந்திரனல்லவோ அர்ஜுனனாய் பிறந்
திருக்கிறான். மேலும் அர்ஜுனன் ஸ்ரீகிருஷ்ணரின் தூண்டுத
லன்னியில் இந்திரனுக்கு விரோதம் செய்யமாட்டான்
என்ற உத்தேசத்தால் அக்னி ஸ்ரீகிருஷ்ணனை யாசித்
தது. அர்ஜுனன் ஸ்ரீகிருஷ்ணரின் ஸகாயமன்னியில் இந்
திரனை ஜயிக்கமாளான் என்ற எண்ணத்தில்பேரில் அக்னிபக
வான் ஸ்ரீகிருஷ்ணரிடமிருந்து அதிகமாய் அனுமதி பெற்றார்.
பிறகு அக்னி பதரிகாசிரமத்தில் நாராயணருடைய சமீபம்
போய், அவரிடமிருந்து சக்ராயுதத்தைப் பெற்று ஸ்ரீகிருஷ்ண
ருக்கு கொண்டுவந்து கொடுத்தார். சக்ராயுதம் முன்பு தானாக
பக்தியின்பேரில் ஸ்ரீகிருஷ்ணரிடம் அவர் கோமந்த பர்வதத்தி
லிருக்கும்பொழுது வந்திருந்தது. இச்சமயம் அக்னிபகவான்
கொடுத்த சக்ராயுதமும், கோமந்த பர்வதத்தில் தானாக வந்த சக்
ராயுதமும் இரண்டும் ஒன்று சேர்ந்துவிட்டது. ஸ்ரீவிஷ்ணுவின்
சக்ராயுதமானது இவ்வாறு அநேக ரூபங்களுடன் இருந்தது.
பிரம்மா எந்த தனுஸ்ஸைக்கொண்டு எல்லா ஜகத்தையும் நிக்ரஹம்
செய்தாரோ அந்த ப்ரம்மாவின் தனுஸ்ஸை அக்னிபகவான் பிறகு
அர்ஜுனனுக்கு கொண்டுவந்து கொடுத்தார். பிரம்மா ஒரு
ஸமயம் அந்த காண்டீவமென்ற தனுஸ்ஸின் ஒரு அம்சத்தை
ருத்திரனுக்கும், இந்திரனுக்கும், சந்திரனுக்கும், வருணனுக்கும்
கொடுத்திருந்தார். பிரம்மாவின் அருளால் இந்திரன் முதலான
அந்த தேவர்கள் அந்த காண்டீவமென்ற தனுஸ்ஸைக்கொண்டு

கிரமமாய் மூவுலகத்தையும் ஜயித்தனர். ஆகவே ப்ரம்மா, ருத்திரன், இந்திரன், சந்திரன், வருணன், இந்த ஐந்து தேவர்களைத் தவிர இதரர்களால் தூக்கமாளாததும், ஜயத்தைத் தருவதும், ஒரு லக்ஷம் மணு பாரத்திற்கேற்ற பரிமாணமுள்ளதும், க்ஷேமத்தை விளைவிப்பதுமான காண்டீவ தனுஸ்ஸையும், வெண்மையான நான்கு குதிரைகள் கட்டியதும், க்ஷேமத்தைத்தருவதுமான ஓர் ரதத்தையும், அக்ஷயமாய் பாணங்கள் நிறைந்திருக்கும் அழகிய இரண்டு அம்பராத்தூணிகளையும், ஹனுமார் அடையாளமுள்ள ஸ்ரீராமருடைய த்வஜத்தையும், ஆக இந்த எல்லா வஸ்துக்களையும் அக்னிபகவான் வருணனிடமிருந்து கொண்டுவந்து கொடுத்தார். ஹனுமார், த்வஜத்திலிருக்கும்பக்ஷத்தில் இதரர்கள் ஜயிப்பதென்பது விசேஷமாய் முடியாமற்போகும். ஏனெனில் ஹனுமார் ஜயத்தைத்தரும் ரூபமுள்ளவர். காண்டீவதனுஸ் முதலான இந்த யுத்த ஸாதனங்கள் லோகவிலக்ஷணமானவைகள். இதரர்களால் பேதிக்கமுடியாதவைகள். காண்டீவத்திற்குக் கட்டும் நாணும் மின்னலைப்போல் ஒளியுள்ளது. காண்டீவ தனுஸ்ஸானது பிரம்மாவைத் தவிர்த்துள்ள இதரர்களால் தூக்கமாளாததாயினும், ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியின் அருளால் அர்ஜுனனுக்குத் தூக்கமுடிந்தது. பரமசிவன் முதலான மேற்கண்ட நான்கு தேவர்கள் பிரம்மாவின் வரத்தால் அதை தூக்கிறார்கள். அதை ஏகதேசமாய் தூக்கி எடுக்கும் விஷயத்தில் பிரம்மா ஒருவர்தான் ஸமர்த்தர். பிரம்மா இந்த காண்டீவத்தைத் தூக்க சக்தி வரட்டுமென்று இந்திரனுக்கு வரனைக் கொடுத்தார். அந்த இந்திரன்தான் அர்ஜுனனைப் பிறந்ததன் நிமித்தம் இந்த காரணத்தாலும் அர்ஜுனனுக்கு இந்த காண்டீவத்தைத் தூக்கமுடிந்தது. இந்த காண்டீவ தனுஸ் முதலானவைகள் வந்தபின், அர்ஜுனன் அஸ்திர மந்திரங்களால் அந்த காண்டவ வனத்தின்மேலே பூரா ஓர் பெரிய பாணக்கொட்டகையை நிர்மாணம் செய்தான். பன்னிரண்டு யோஜனம் விஸ்தீர்ணமுள்ள பாணக் கொட்டகையை ஓர் நகரம்போல் இந்திர புத்ரனான அர்ஜுனன். நிர்மாணம் செய்தான். அக்னிபகவான் தன் ஜ்வாலையை வளர்த்திக்கொண்டு காண்டவவனத்தை வளைத்து சீக்கிரம் பக்ஷித்தார். அப்பொழுது இந்திரன் தன் தோட்டத்தைத் தகித்துவரும் அக்னியைக்கண்டு கோபமடைந்த மனதுடன் அக்னியை நாசம் செய்யக்கருதி தேர் அச்சு அளவு பருமனான உதக தாரைகளைப் பொழிந்து சங்கடப்படுத்தினான்.

(தொடரும்.)



# ஸ்ரீவாதிராஜஸ்வாமிகளின் சரித்திரம்.

(முன் 344-ம் பக்கம் தொடர்ச்சி.)

## பச்சை விட்டலர் கிடைத்தது.

ஸ்ரீவாதிராஜர் கேரள்தேசம் திரும்பிவந்து அங்குள்ள மூடபிதிரே என்னும் ஊரில் தங்கியிருக்கையில், பங்க வம்சத்திய அவ்வூரிலுள்ள ஜைனராஜனொருவன் ஸ்ரீவாதிராஜருக்கு மிக்க மரியாதை செய்து அவனைச் சேர்ந்ததான ஆயிரக்கால் மண்டபம் முதலியவைகளைக் கொண்ட மிக்க பெரிய பௌத்த தேவஸ்தானத்திற்கு வந்து நவரத்தினங்களில் ஒவ்வொரு ரத்னத்தாலும் தனித்தனியே பூராவாய் நிர்மிதமான மதிப்புக் கடங்காத ஒன்பது ரத்ன விக்ரஹங்களிருப்பதை வந்து தரிசிக்கவேண்டுமென்று வெகுவாய் கேட்டுக்கொண்டான். ஸ்ரீவாதிராஜரும் புத்தரூபியான பரமாத்மா நாராயணனின் தரிசனத்திற்காக அழைக்கப்பட்டதால், அவ்வழைப்புக்கிணங்கி அப்பேர்ப்பட்ட அபூர்வமான நவரத்னமய ப்ரதிமைகளைப்பார்க்க குதூஹலமுடையவராய் அரசனுடன் கோயிலுக்குட்புகுந்து, அந்த ஒன்பது விக்ரஹங்களையும் தரிசித்தார். மிக்க சந்தோஷமடைந்தார். அரசே! உங்கள் புத்தமூர்த்தி என் கண்ணிற்கு தென்பட்டுவிட்டார். இனி அவர் என்னைச் சேர்ந்தவராய்விடுவார். பிறகு நான் ஏன் இவரை அழைத்து வந்தேன் என்று வருத்தப்படலாகாதென்று சொன்னார். அதற்கு அரசன் உங்கள் கொள்கைக்கு மாறாய் லக்ஷணங்களைக்கொண்ட எங்கள் புத்தன் உங்களைச் சேர்ந்தவர் எப்படி ஆகக்கூடும். அப்படிக்கு அந்தபகவானே சம்மதித்து விடும்பக்ஷத்தில் எனக்கு என்ன ஆக்ஷேபணை என்று மிக்க மரியாதையாய் அரசனுடைய பெருந்தன்மைக்கேற்ப பதிலளித்தான். ஸ்ரீவாதிராஜர் அந்த ஒன்பது விக்ரஹங்களில் பச்சை மாணிக்யத்தின் புத்த விக்ரஹம் அநேகமாய் தமது சாஸ்திரலக்ஷணப்படி அமைந்திருப்பதைக்கண்டு அதில் சிறிது நேரம் ஸ்ரீபாண்டுரங்கனின்மூர்த்தியை தியானித்தார். அரசன் தம்முடைய புத்த விக்ரஹங்களை ஸ்ரீவாதிராஜர் மிக்க பக்தியுடன் பணிகிறார் என்று சந்தோஷமாய் பார்த்திருந்தான். அச்சமயம் பெருங்கூட்டம் சூழ்ந்திருந்து வெகு குதூஹலத்துடன் கவனித்திருந்தது. அச்சமயம் ஒருவரும் எதிர்பாராதபடி அந்த ஒன்பது நவரத்ன விக்ரஹங்களில் பச்சை பௌத்த விக்ரஹம் மட்டில் திடீரென்று ஆடி அசைந்து ஓர் கையில் சங்கத்தைப் பிடித்து மற்றொரு கையை இடுப்பில் வைத்துக்

கொண்டபடிக்குள்ள நிலைமையை அடைந்தது. இதைக்கண்டு எல்லோரும் மகா ஆச்சரியமடைந்தனர். அரசனும் தன்னுடைய கடவுள் ஸ்ரீவாதிராஜரிடம் மகிழ்ந்து புதிய உருவை அமைத்து கொண்டுவிட்டதைப் பார்த்து, ஸ்ரீவாதிராஜரிடம் முன்னே விட பன்மடங்கு பக்தியடைந்து, தம்மிடம் மகிழ்ந்த எங்கள் கடவுள் தங்கள் பூஜையைப் பெற்று தங்களிடமே இருக்கட்டுமென்று சொல்லி அந்த பச்சை விட்டலரை அவருக்கே தானம் கொடுத்துவிட்டான். அது இன்றைக்கும் அவருடைய மடத்தில் பூஜையில் இருந்துவருகிறது.

## சீர்திருத்தம்.

இவ்வாறு ஸ்ரீவாதிராஜர் அநேக சரித்திரங்களைக் காட்டிக்கொண்டு தேச்சஞ்சாரம் செய்து உடுபிக்கு வந்து பரியாய உற்சவம் நடத்தி ஸ்ரீகிருஷ்ணரின் பூஜையில் அமர்ந்தார். அன்றுவரை உடுபி அஷ்டமடத்து ஸ்வாமிகள் ஒவ்வொருவரும் இரண்டு இரண்டு மாதங்கள் ஸ்ரீகிருஷ்ணரை பூஜிப்பதென்ற நியமம் ஸ்ரீபகவத் பாதாளின் காலம் முதற்கொண்டு நடந்து வந்தது. ஸ்ரீவாதிராஜர் அந்த வழக்கத்தை மாற்றி ஒவ்வொருவரும் இரண்டு வருஷங்கள் பூஜிப்பதென்று விதியை ஏற்படுத்தினார். இதற்கு காரணம் உடுபி அஷ்டமடாதிபதிகள் ஸ்ரீகிருஷ்ணரை எப்பொழுதும் பூஜித்துக்கொண்டும், கோயில் செலவுகளுக்கு இதர ஸ்ரீமத்வ சிஷ்யர்களான ஸ்ரீபத்மநாபதீர்த்தர் முதலிய பரம்பரைகளிலுள்ள மடாதிபதிகள் தேசசஞ்சாரம் செய்து பாடப்ரவசனம் செய்துகொண்டு சிஷ்யர்களிடமிருந்து திரவியங்களை சம்பாதித்து, உடுபிக்கு அனுப்பிவரவேண்டுமென்றும், ஸ்ரீபகவத்பாதாள் நியமனம் செய்திருந்தார். அதன்படி இதர மடத்தார்கள் உடுபிக்கு பணம் அனுப்புவதை நிறுத்தியவுடன், ஸ்ரீகிருஷ்ணரின் பூஜகர்களான அஷ்டமடாதிபதிகளே தம் பரியாயங்களில் ஸ்ரீகிருஷ்ணரின் பூஜைக்கு வேண்டிய திரவியங்களை தேசசஞ்சாரம் செய்து ஸம்பாதித்துக் கொண்டுவர நேரிட்டதால், அவ்வாறு கொண்டுவர அவர்களுக்கு தகுந்த ஸாவகாசம் ஏற்பட ஒவ்வொருவரும் இரண்டு வருஷகாலம் பூஜை செய்வதென்று வரை ஏற்படுத்தினார். இதனால் தம் தம் பரியாயத்திற்கு முன்பு விஸ்தாரமாய் தேசசஞ்சாரம் செய்ய அவர்களுக்கு சௌகரியமாயிற்று. அவரவர்களுக்கு தனித்தனி மடங்களும் தனித்தனி ஜாகிர்களுமிருக்கும்படி ஸ்ரீவாதிராஜர் தம் சிஷ்யர்கள் மூலமாய் ஏற்பாடு செய்தார். ஸ்ரீகிருஷ்ணரின் கோயிலை தான் ஜீர்ணோத்தாரம் செய்து வெகு அழகாய் கட்டி முடித்தார். அயோத்தியின் வெளிப்



புறமிருந்த கருட முக்யப்ராணர்களின் விக்ரஹங்களை ஸ்ரீவாதிராஜர் தேசசஞ்சாரக்கிரமத்தில் அங்கு போயிருந்தபொழுது பெயர்த்து எடுத்து வந்து, அவைகளை ஸ்ரீகிருஷ்ணரின் வாயவ்ய பாகம் நைருத்ய பாகங்களில் ப்ரதிஷ்டை செய்தார். உத்தரத்வாரத்தில் ஸ்ரீமத்வாசாரியாரின் விக்ரஹத்தை ஸ்தாபித்தார். பாஜகக்ஷேத்திரத்திலேயும் ஸ்ரீமத்வாசாரியாரின் பாதம் இருந்த இடத்திலேயும் ஸ்ரீமத்வாசாரியாரின் விக்ரஹங்களை ப்ரதிஷ்டை செய்தார். டெல்ஹியில் கிடைத்த ஏராளமான பொருட்களைக்கொண்டு ஸ்ரீகிருஷ்ணர் கோயிலின்மீது தங்கத்தகடுகளைப் பரப்புவதாய் ஸ்ரீவாதிராஜர் எத்தனப்படவும், இக்கலியில் பாபபுத்தி மேலிட்ட ஜனங்கள் அதிகமாக இருப்பதால், இந்த யோசனையை விட்டுவிடுங்கள் என்று அவருக்கு பகவானின் ஆக்ஞை ஏற்பட, அந்த ஏராளமான திரவியத்தை ஸ்ரீகிருஷ்ணரின் கோயிலிலேயே வடபுறத்தில் பூமியில் புதைத்துவிட்டு, அதை பத்திரமாய் ஸம்ரக்ஷித்துவருவதற்காக, அந்த ஸ்தலத்தின்மீது ஸர்பராஜனை ப்ரதிஷ்டை செய்தார். மிச்சம் மீதியுள்ள ஏராளமான திரவியத்தையும் தன் மடத்தில் பூமிக்குள் புதைத்துவைத்து அதன்மீது அதன் ஸம்ரக்ஷணத்திற்காக பூதராஜனை ப்ரதிஷ்டை செய்தார்.

## ஸமாதி நிலை.

ஓர் ஏகாதசியன்று ஸ்ரீவாதிராஜர் தன் ஸ்வாமிக்கு அலங்கார பூஜைவரையில் செய்துவிட்டு பகவானைப் பார்த்துக்கொண்டே தியானத்திலமரவும் அந்த ஸமாதியில் நேரமானது தெரியாமல், அன்றிரவு பூராவும் கழிந்து மறுநாள் சூரியோதய காலத்தில்தான் அவருடைய தியானம் கலைந்துபோயிற்று. விழித்துப்பார்த்தார். அன்று அவர் ஸாதனத்வாதசி காலம் நெருங்கிவிட்டதால் அவர் தடபுடலாய் பகவானுக்கு பழங்களை மட்டில் ஸமர்ப்பித்து அதனுடனே முதல் நாள் பூஜையை முடித்துவிட்டு ஸ்நானம் முதலியவைகளைச் செய்து அன்று செய்யவேண்டிய பூஜாதிகளை முடித்து பாரணை செய்தார். அதன் நிமித்தமாய் இன்றைக்கும் அவருடைய ஸோதே மடத்தில் ஏகாதசியன்று அலங்காரமானவுடனே பழம் முதலியவைகளை ஸமர்ப்பிப்பதுடன் பூஜை முடிக்கும் வழக்கம் காணப்படுகிறது.

## ஸ்ரீமூகாம்பிகையின் அருள் பெற்றது.

ஸ்ரீவாதிராஜருக்கும் சத்ருக்கள் இல்லாமலில்லை. அவருக்கு ஏற்பட்டிருந்த மகா கீர்த்தியைக்கண்டு மாச்சரியமடைந்து அவருக்கு எப்படியாவது ஓர் அவப்பெயரை உண்டாக்க சிலர் எத்தனித்தனர்

ஸ்ரீவாதிராஜர் கும்பாஸியின் சமீபம் கொல்லூருக்கு வந்திருந்தஸமயம் அங்குள்ள சில சத்ருக்கள் ஒன்றுகூடி ஓர் பாலகனை தயார் செய்து அவனை ஸ்ரீவாதிராஜரை திட்டும்படிச்செய்ய, ஸ்ரீவாதிராஜர் கோபமடைந்து தம் ஆட்களைக்கொண்டு அவனை தம் மடத்திலிருந்து வெளியே தள்ளச்செய்தார். அவருடைய விரோதிகள் இந்த விருத்தாந்தத்தை ஒன்றுக்கிரண்டாய் மிகைப்படுத்தி பையன் சொன்ன தூஷணைகள் எல்லாம் சரிதான் என்றும் அதற்கு பதில் சொல்லமுடியாமற்போனால் ஸன்யாஸியாயிருப்பவரான இவர், அவனை அவ்வளவு இரக்கமின்றி அடித்துப் புடைக்கச் செய்யலாமாவென்றும் மூலைமூலைக்கு நின்று பேசினர். அன்றிரவே அந்த பையனை ஓர் இரகசியமான அறையில் வைத்து பூட்டிவிட்டு, பையன் காணமற்போயிருப்பதாயும், எங்கு தேடியும் அகப்படவில்லை என்றும், ஸ்ரீவாதிராஜர் அவனைக் கொல்லச் செய்திருக்கவேண்டுமென்றும், பொய்யான வதந்தியைக் கிளப்பிவிட்டனர். பொது ஜனங்களும் இதைப் பற்றியே எங்கும் பேசிவந்தனர். இச்செய்தி உடுபிக்கும் எட்டி அங்குள்ளோரும் உடனே ஓடிவந்து ஸ்ரீவாதிராஜரை உண்மையை விசாரிக்கத் தொடங்கினர். ஸ்ரீவாதிராஜர் தனக்கு யாதொரு விஷயமும் தெரியாதென்றும் தன்னை அகாரணமாய் தூஷித்த அந்தப்பையனை முதல் நாள் தம்மடத்திலிருந்து அப்புறப்படுத்தியதுமட்டில் தனக்கு தெரியுமென்றும், வேறு அதிகமாய் தன்னால் யாதொன்றும் நடக்கவில்லை என்பதற்கு அவ்வூரிலுள்ள மகாமகிமைவாய்ந்த ஸ்ரீ மூகாம்பிகைதான் தனக்கு ஸாக்ஷியென்றும் சொன்னார். ஸ்ரீவாதிராஜரிடம் உண்மையான பக்திகொண்டவர்களும்கூட இதன் உண்மையை அறியாமல் ஏங்கினர். ஸ்ரீவாதிராஜரும் மனம் நொந்து ஸ்ரீ மூகாம்பிகையை சரணமடைந்து இந்த மர்மத்தை வெளியாக்க ப்ரார்த்தித்தார். ஸ்ரீ மூகாம்பிகையும் ஸ்ரீவாதிராஜரின் ப்ரார்த்தனைக்கிணங்கி அவருக்கு அபயமளித்துவிட்டு, இரகசிய ஸ்தலத்தில் பதுங்கிக் கிடக்கும் அந்த பையனின் எதிரில் இராக்காலங்களில் சொப்னத்திலும் ப்ரத்யக்ஷமாயும் ஓர் கன்னிகையாய் தோன்றி, குதிரை சவுக்கால் அவனை அடித்து, ஸ்ரீவாதிராஜரின் காலில் விழும்படி துறத்தத்தொடங்கினாள். அந்த பாலகன் இந்த அடியை சில நாள் பொறுத்துப்பார்த்தும் நாளுக்குநாள் சவுக்கடி அதிகமாகப்போகவே மகா சங்கடமடைந்து, ஓவென்று அலறிக்கொண்டு, தன் இரகசிய ஸ்தலத்திலிருந்து வெளியேறி, ஸ்ரீவாதிராஜர் இருந்த இடத்திற்கு ஓடிவந்து அவருடைய சரணங்களில் விழுந்து, தான் இன்ன இன்ன பண்டிதர்களால் தூண்டப்பட்டு அவரை தூஷித்ததாயும், இன்னாரால் இரகசியமாய் வைக்கப்பட்டிருந்ததாயும், ஓர் பெண் தினம் தன்னை குதிரை சவுக்கால் அடித்து அவரிடம் போகும்படி துறத்திவந்ததாயும், முடிவில் அந்த வலியைத்தாளாமல் தன் மர்மத்தை வெளியாக்க நேரிட்டதாயும், எல்லா விருத்தாந்தங்களையும் விஸ்தாரமாய் அறிவித்து, தன்னை மன்னித்தருளும்படி வேண்டினான்.

(தொடரும்.)



## ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றிய

# ஸ்ரீமத்வ விஜயம்.

### இரண்டாவது ஸர்க்கம்.

(முன் 367-ம் பக்கம் தொடர்ச்சி.)

### கொள்ளை ஊட்டியது.

(39) நான் குழந்தையை விட்டு வந்து நேரமாகிவிட்டது; பால்சாப்பிட குழந்தை அதிகமாய் அழுது கொண்டிருப்பான். இது நிச்சயம். இதராளுடைய காரியத்தில் ஈடுபட்டு என் வயிற்றில் பிறந்த பச்சைக் குழந்தையின்மீது கருணையில்லாமற்போன என் ஜன்மத்தைச் சுடு; என்று சொல்லி மத்யகேஹரின் பத்னியாள் மனம் கலங்கி பதறிப்போய் வீட்டிற்கு வந்து சேர, வீட்டிற்குள் குழந்தை சந்தோஷமாய் வயிறுநிறைந்து இருப்பதைக் கண்டாள். (40) மிகவும் ஆச்சரியப்பட்டு தன் பெண்ணை கூப்பிட்டு இவ்வாறு குழந்தையின் வயிறு நிறைந்திருப்பதற்கு காரணமென்னவென்று கேட்க, அப்பெண், குழந்தை அதிகமாய் அழுதது, பிறகு அங்கிருந்த கொதிக்கும் கொள்ளை உண்ணக்கொடுத்தது முதல் நடந்ததை எல்லாம் சொல்ல, வேதவதி அவள் மூலமாய் எல்லாம் கேட்டறிந்து, குழந்தை சாப்பிட்ட இந்த கொள்ளுச் சுண்டல் நல்ல யௌவனஸ்தர்களாலும் ஜீர்ணத்துக்கொண்டுவர முடியாததாயிற்றே! இனி என்ன செய்வதென்று யோசனையில் ஆழ்ந்து பெண்ணை வெகுவாய் திட்டி குழந்தைக்கு ஏதோ ஆபத்து ஏற்படப்போவதாய் பயந்தாள். பெண்ணை மிகவும் கோபித்தாள். நான் ஏன் இவ்வாறு வெகுநேரம் வெளியே போயிருந்தேன் என்று பச்சாத்தாபம் கொண்டாள். (41) அவ்வாறு கொதிக்கும் கொள்ளுச்சுண்டலை உண்டும், அந்தக் குழந்தை எப்பொழுதும்போல் ஆரோக்யசாலியாய் இருந்ததைப் பார்த்துவிட்டு, அக்குழந்தையின் தாயான வேதவதி ஆச்சரியப்பட்டாள். ஆனால் எல்லா விஷயங்களிலும் தங்குதடையில்லாத ஸாமர்த்தியமுள்ள அந்த குழந்தையாகிய வாயுபகவானின்

தாயான லோகமாதாவான மகாலட்சுமியோ, முன் வாயுபகவான் அமிர்தமதன காலத்தில் காளகூட விஷத்தைப்பானம் செய்த பொழுதும்கூட ஆச்சரியப்படவில்லை. மத்யகேஹரின் பத்னியான வேதவதியம்மாள் ஆச்சரியப்பட்டதற்கு மகாலட்சுமியைப் போல் அந்த குழந்தையின் ஸாமர்த்தியம் இன்னதென்பதை அவள் அறியாததுதான். (42) அதனால் உடனே அந்த அம்மாள் குழந்தையை வாரி எடுத்து, தன் ஸ்தனப்பாலை அடிக்கடி பருகக் கொடுத்தாள். குழந்தையும் அவ்வளவு கொள்ளையும் ஜீரணத்துக்குக்கொண்டுவந்து முன்போலவே பசியுடன் ஸ்தனப்பாலைப் பருகிற்று. தந்தையான மத்யகேஹரும் குழந்தைக்கு எந்த தீங்கும் வராமலிருப்பதற்காக தன்வந்தரி மந்திரம் சாந்திஸூக்தங்கள் முதலியவைகளை ஜபித்தார். தாய் தந்தையர்களைத் தவிர்த்துள்ள பந்துவர்க்கங்களும்கூட குழந்தையை சீராட்டி அது சொஸ்தமாய் இருக்கிறதா என்று பரீக்ஷித்துப்பார்த்தனர். ஏனெனில் தாய் தந்தையர்கள் பந்துவர்க்கங்கள் எல்லோருமே அக்குழந்தையின் திருமுகத்திலுள்ள புன்சிரிப்பாகிய அமிர்தத்தில் ஆசைகொண்டிருந்தனர். குழந்தை முன்போலவே சிரித்து விளையாடி எல்லோர் மனதைக் கவர்ந்தது.

### பேசவாரம்பித்தது.

(43) பிறகு சிறிதுகாலம் கழித்து அந்த பாலகனின் வதனத்தில் வாக்குக்கு அபிமானியான ஸரஸ்வதிதேவி, பிரம்மருத்ராதி தேவர்களாகிய ஸாது ஸமூகத்தால் பக்தியுடன் எதிர்பார்க்கப்பட்டதும், அழகிய சொற்களைக் கொண்டதும், முதலில் ஸ்பஷ்டமாயில்லாததும் அதனால் வெட்கப்பட்டிருப்பது போலுள்ளதும் உலகில் மரியாதை செய்யப்படுவதுமான பேச்சுடன் அதிகமாய் விளையாட ஆரம்பித்தாள். எப்படியென்றால் ப்ரம்மாவின் பத்னியான ஸரஸ்வதி, சதுர்முகனின் ஸபையில் தேவர்கள் முதலான ஸாதுக்களில், அவள் வெளியில் எப்பொழுது வரப்போகிறாள் என்று எதிர்பார்க்கப்பட்டவளாய், சோபிக்கும் கால்நடையுள்ளவளாய், முதலில் திரைக்குள் மறைந்திருந்து ஸ்பஷ்டமாய் காணப்படாதவளாய், வெட்கத்துடனிருப்பவளாயிருந்து விளையாடுவாள். அப்படி இங்கு விளையாடினாள் என்றால், இக்குழந்தை ஸ்பஷ்டமாயில்லாத குதலை வார்த்தைகளை அதிகமாய்ப் பேசவாரம்பித்தது என்று பொருள். ப்ரம்மாவின் ஸபையில் போல் இக குழந்தையின் வதனமாகிய இரங்கஸ்தலத்திலும் ஸரஸ்வதிதேவி தன்னால் அபிமானிக்கப்படும் வாக்கைக்கொண்டு விளையாடினாளென்றும் பொருள்படும். (44) பிறகு இந்த வாசுதேவரென்ற பெயருள்ள குழந்தை முதலில் இருகைகளையும் இரண்டு முழங்காலையும் கீழே ஊன்றி தவழ்ந்து வீட்டின்குள்ளேயே சஞ்சரித்தது. பிறகு சிலநாள் கழித்து தானாகவே வேறு எந்த ஆதாரமுமில்லாமல் கால்களை ஊன்றி நின்றது. பிறகு கிரமமாய் பழக்கப்பட்டு எங்கும் காலடி வைத்து நடக்கவாரம்பித்தது. யாருடைய அருளால் எல்லா பிராணிகளுக்கும் நடமாட்டம் ஏற்படுகிறதோ அந்த வாயு பகவானாகிய இந்த குழந்தைக்கு இந்த சேஷ்டைகளெல்லாம் கேவலம் லோகவிடம்பம்தான்.



### வன சஞ்சாரம்.

(45) இப்படியிருக்க ஒரு நாள் சூரியோதய காலத்தில் இந்த பாலன் தன்னுடைய மாட்டுக்கொட்டிலிலிருந்து காட்டில் எங்கெங்கேயோ போய் புற்களை மேய புறப்பட்டதான அவருக்கு பிரியப்பட்ட அவருடைய சொந்த ஓர் விருஷபத்தின் மாசற்ற வால் பக்கத்தைப் பிடித்துக்கொண்டு தாய் தந்தையர்கள் முதலான எந்த சொந்த ஜனங்களின் கண்ணிற்படாதவராய் வீட்டை விட்டு காட்டிற்கு புறப்பட்டுப்போனார். (46) உயர்ந்த சிருங்கங்களால் பிரகாசிப்பதும், பாதங்களால் பூப்ரதேசத்தை ஆக்கிரமித்திருப்பதும், மிக்க பெரிதான சரீரமுள்ளதும், அழகிய கண்கள் முதலான நவத்வாரங்களுள்ளதுமான அந்த விருஷபத்தின் அவயவங்களின் ஏகதேசமாகிய வால்பாகத்தை ஆசிரயித்திருந்த அந்த பாலகன், உயர்ந்த கொடிமுடியால் பிரகாசிப்பதும், அடிவாரமலைகளால் கீழ்த்தரையை ஆக்கிரமித்திருப்பதும், அநேக யோஜனை தூரம் விஸ்தாரமாயுள்ள உருவங்கொண்டதும், அழகிய பொந்துகளுள்ளதுமான உதய பருவதத்தை ஆசிரயித்த சூரியன் போல், அந்த விடியற்காலையில் வனாந்தரங்களில் விளங்கினார். (47) இஷ்டப்படி எங்கும் சஞ்சரித்துக்கொண்டிருந்த இந்த பாலன் எங்கேயாவது விளையாட்டிற்காக பதுங்கி

இருக்கிறானோ, அல்லது வீட்டிற்குள்ளேயே ஒருவருக்கும் தெரியாமல் இருந்துவருகிறானோ, அல்லது கிணற்றில் எட்டிப் பார்த்து உள்ளுக்குள் விழுந்துவிட்டானோ என்று இவ்வாறெல்லாம் ஆலோசித்துக்கொண்டு அடிக்கடி அங்குமிங்கும் அதிகமாய்த்தேடி அலைந்து எங்கும் அந்த பாலனைக்காணாமல் அவருடைய உறமுறையார்களெல்லோரும் மனதில் மகா துக்கத்தை அடைந்தனர். (48) அன்று மாலையில் அந்த விருஷபம் வீட்டிற்கு திரும்பிவரும் பொழுது அதன் வாலைப் பிடித்துக் கொண்டு திரும்பிவரும் ஒருவருஷம் பிராயமுள்ள அந்த பாலகனை ஜனங்கள் பார்த்தபிறகு தான், மாட்டின் வாலை பிடித்துக்கொண்டு ஓர் குழந்தை வனத்தில் சஞ்சரிப்பதாய் சொன்ன, ஓர் மாடுமேய்ப்பவனின் வார்த்தை உண்மைதானென்று அவர்கள் நம்பினார்கள். (49) விரும்புவதை எல்லாம் தரும் சிந்தாமணி என்ற ச்ரேஷ்டமான இரத்தினத்தை ஓர் தரித்திரன் அடைந்தால் எப்படியோ, ஸம்ஸாரத்திலிருந்து விடுதலையடைய விரும்புகிறவன் விஷ்ணு விஷயமான விசேஷக்ஞான மார்க்கத்தை அடைந்தால் எப்படியோ, அப்படி தாய்தந்தையர்களான அந்த பாலகனின் சொந்த ஜனங்கள் அவர்கள் அன்று முழுதும் காணாதிருந்த தம் மைந்தன் ஸம்ரக்ஷிதமாய் வீட்டிற்கு வந்து தங்களுக்கு கிடைத்துவிட்டதைப் பார்த்து பரமாநந்தமடைந்து அவ்வாறு கிடைத்தது அவர்களுடைய தெய்வமான ஸ்ரீ அநந்தேசுவரரின் அனுக்கிரஹந்தான் என்று எண்ணினர்.

## கடனுக்கு புளியங்கொட்டைகளைக் கொடுத்தது.

(50) ஒருஸமயம் அந்த பாலகன் தன் விளையாட்டு முடியும் பொழுது திடீரென்று வந்து தந்தையான மத்யகேஹரை சாப்பிடவர கூப்பிடவும் அவர் தன் மைந்தனின் சந்திரவதனத்தைப் பார்த்து மெதுவாக அன்புடன் "குழந்தாய்! எங்களுக்கு காளையை விற்ற இவர் என்னை போஜனம் செய்யவிடாமல் தடுக்கிறார். இவரும் போஜனம் செய்யாமல் உட்கார்ந்திருக்கிறார். ஆகவே நீ போஜனம் செய்து வா, நான் இருக்கிறேன், என்று சொன்னார். (51) இதைக்கேட்ட அந்த பாலகன் தான் அவ்வளவு வராகன்களைத்



தருகிறேன், என்னுடன் வாருங்கள் என்று அந்த முதலாளியை சமீபத்திலுள்ள ஓர் ஆலமரத்தடிக்கு அழைத்துப்போய், விளையாட்டுத்தனமுள்ளதும் மிக்க மிருதுவாயுள்ளதுமான தன் கையால், அவருக்கு எவ்வளவு வராகன் தரவேண்டுமோ அவ்வளவு புளியங்கொட்டைகளை எண்ணி, சிறித்துக்கொண்டு இதோ உங்களுக்குத்தரவேண்டிய திரவியத்தைத்தருகிறேன், எடுத்துக் கொள்ளுங்கள் என்று கொடுத்தார். அவைகளை அந்த முதலாளியும் மிக்க அன்புடன் பெற்றுக்கொண்டார். வீட்டிற்குவந்து மத்யகேஹரை சாப்பிடப்போகச்சொல்லி தானும் புறப்பட்டுப் போனார். (52) பிறகு சில நாள் கழித்து மத்யகேஹர் அந்த மாட்டின் கிரயத்தை அவருக்கு கொடுக்கப்போயும் அந்த முதலாளி தனக்கு அவருடைய பாலகனால் இந்த திரவியம் கிடைத்துவிட்டதென்று சொல்லி ஸாக்ஷாத் அமானுஷரான அந்த வாயுபகவானின் புதிய உருவான அந்த வாஸுதேவரிடமிருந்து புளியங்கொட்டைகளைப் பெற்ற வியாஜமாக ஸகல புருஷார்த்தங்களில் சிரேஷ்டமான மோக்ஷத்தை அடையப்பெற்றார். என்றால் அந்த பாலகனிடமிருந்து பக்தியுடன் அந்த புளியங்கொட்டைகளைப் பெற்று தன் திரவியம் கிடைத்துவிட்டதாய் சந்தோஷமடைந்ததால், ப்ராணபதியான அந்த வாஸுதேவரிடம் அவர் பக்தி வைத்ததன் நிமித்தம் அவருக்கு வாயுபகவான் மோக்ஷத்தையே தந்தார் என்று பொருள். (53) ஸாதுக்கள், அஸுக்களாகிய ப்ராணங்களுக்கு தேவனாகிய அதாவது அதிபதியாகிய முக்ய ப்ராணரின் நிர்துஷ்டமான அம்சமுள்ளவரும், மேற்கண்டவாறு பலவகை லீலைகளைச் செய்பவரும் வாஸுதேவன் என்ற மேலான நாமமுள்ளவருமான அந்த பாலகனை வாஸுதேவனை ஸ்ரீகிருஷ்ணரைப்போல் அவருடைய லீலைகளைக்கேட்டுக் கொண்டாடினார்கள். (54) ஸ்ரீநாராயணருடைய ஸேவகரான இந்த வாஸுதேவனென்ற பாலகன் தன் ஸாமர்த்தியத்தை வெளிக்காட்டாமல் கூடமாயிருந்து பூமியில் இவ்வாறு க்ரீடித்து வரும்பொழுது ஸாது ஜனங்களின் மனது ஆனந்தம் நிறைந்ததாயிற்று. சூரியன் மேகஜாலங்களால் மறைக்கப்பட்ட கிரணங்களுடனிருந்தாலும்

உதயமானானென்றால் ஜனங்களின் கண்களாகிய தாமரைகள் மலருமன்றோ?

ஸ்ரீமத் கவிகுல திலகரான ஸ்ரீ த்ரிவிக்ரம பண்டிதாசாரி
யாரின் குமாரரான ஸ்ரீமன் நாராயண பண்டிதாசாரி
யார் இயற்றிய ஸ்ரீமத்வ விஜய மகா காவியத்தில்
இரண்டாவது ஸர்க்கம் ஸம்பூர்ணம்.
ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து.

# ஸ்ரீபீமசேன விஜயம்.

(முன் 374-ம் பக்கம் தொடர்ச்சி.)

மகாபாரதம் கூறுவதாவது:— பீமசேனோஹஸன்னேவ புக்த்வா த்யக்த்வா ச ரக்ஷஸம் | பீத்வா ததிகடான் பூர்ணான் கிருதகும்பான் சதம் சதம் | வார்யுபஸ்பிருச்ய ஸம்ஹிருஷ்டஸ் தஸ்தௌகிரிரிவாபர: ||"இவ்வாறு சொல்லப்பட்டிருப்பதிலிருந்து பீமசேனர் போஜன விஷயத்தில் அந்த நெருக்கடியான ஸந்தர்ப்பத்திலேயும் தன் வர்ணாசிரமாசாரத்தைக்கொண்டிருந்தவர் என்று ஸ்பஷ்டமாய் விளங்குகிறது. பிறகு பீமசேனருடன் பகாஸுரன் அநேக மலைகளாலும் விருக்ஷங்களாலும் பாஹுவாலும் யுத்தம் செய்ய, பீமசேனரும் அவைகளுக்குத் தகுந்தபடி விசித்ரயுத்தம் செய்து முடிவில், அவனை கீழே வீழ்த்தி ஸம்ஹாரம் செய்தார். பகாஸுரன் இறந்துபோனதைப்பார்த்துவிட்டு அவனுடைய தம்பியும் மற்றும் அவனைச்சேர்ந்த அநேக ராக்ஷஸர்களும் தங்களை ஸம்ரக்ஷிக்கும்படி பீமசேனரை சரணமடைய, பீமசேனர் அவருடைய ஸ்வாமியான ஸ்ரீராகவனைப்போல் அவர்களுக்கு அபயமளித்து, பிராம்மணர்களுக்கு எந்த தீங்கும் செய்யாமலிருந்தால் அவர்களுக்கு தன்னால் யாது பயமும் ஏற்படாது என்று அறிவித்தார். அவர்களும் அவ்வாறே ஒப்புக்கொண்டு அன்று முதல் அவ்வூரில் ராக்ஷஸர்கள் மனுஷ்யர்களுடன் சாதாரணமாய் புழங்கிவந்தனர். மகாபாரதம் கூறுவதாவது:— "ஸகணஸ்து பகப்ராதா ப்ரணமத் பாண்டவம் ததா | தத: ப்ரபிருதி ரக்ஷாம்ஸி தத்ர ஸௌம்யானி பாரத | நகரே ப்ரத்யதிருச்யந்த நரைர் நகரவாஸிபி:" இவ்வாறு பீமசேனர் தன் பாஹுபலத்தால் ராக்ஷஸர்களின் தீயகுணம் மாறும்படி செய்தார். பீமசேனர் பகாஸுரனை ஸம்ஹரித்து ஊரார் எல்லோரும் அந்த சவத்தை பார்க்கும்படி வண்டியின் முன்னாடி வைத்து அவ்வூர் வெளிவாசலில் போட்டுவிட்டு, ஸ்நானம் செய்து வீடுவந்து சேர்ந்தார். அவர் கொன்றதாய் அவ்வீட்டு பிராம்மணர் சொல்லாதிருந்தும் அவ்வூரார் பீமசேனர் கொன்றதாகவே நிச்சயித்துக் கொண்டு பகாஸுரனுக்கு தினம் கொடுத்திருந்தது போலவே, பீமசேனருக்கு மிகுந்த ப்ரீதியுடன் தினம் ஒவ்வொரு வீட்டுக்காரராக ஓர் வண்டி அன்னத்தைக் கொடுத்து வந்தனர். பீமசேனர் அதை ஸ்ரீநரஸிம்ஹ ரூபியான ஸ்ரீஹரிக்கு கப்பமாகக் கட்டிவந்தாரென்று சொல்லப்பட்டிருக்கிறது.



பீமசேனர் பகாஸுர ஸம்ஹாரம் செய்து விட்டு ஸகோதரர்களுடனும் தாயுடனும் ஏகசக்ராபட்டணத்து ஜனங்களால் ஆராதிக்கப்பட்டவராய் அங்கு வசித்திருக்கையில், அவருடைய ஸ்வாமியான ஸ்ரீவேதவ்யாஸ ரூபியான ஸ்ரீஹரி அங்குவந்து பீமசேனாதிகளுக்கு விவாஹம் செய்துவைக்க இச்சித்து அவர்களை பாஞ்சால நகரம் போகும்படிக்கும் அவ்விடம் அயோனிஜளான துரௌபதி ஐவர்களுக்கும் பத்னியாகப்போகிறாளென்றும் அறிவித்தார்.

## துரௌபதி கல்யாணம்.

அதன்படி பாண்டவர்கள் ஏகசக்ரா நகரத்து ப்ராம்மணர்களிடம் விடைபெற்று தாயுடன் ப்ராம்மண வேஷத்துடனே பாஞ்சால நாட்டிற்கு போய் சேர்ந்தனர். துரௌபதியின் சுயம்வரத்திற்காகவென்று துரியோதனாதி கௌரவர்கள் சல்யன் பால்ஹீகன் சிசுபாலன் முதலான அரசர்கள் அநேகர் வந்திருந்தனர். பந்தயத்திற்காக ஓர் சிவதனுஸ் வைக்கப்பட்டிருந்தது. உயர கட்டியிருந்த ஓர் மத்ஸ்ய யந்திரத்தை கீழே அதன் நிழலைப்பார்த்துக்கொண்டு அந்த தனுஸ்ஸை வளைத்து ஐந்து பாணங்களால் மேலே சேதிப்பவர் யாராயிருந்தாலும் அவரை தன் தங்கையான துரௌபதி சுயம்வரமாலிகை இட்டு விவாஹம் செய்து கொள்வாளென்று துரௌபதியின் தமையனா

திருஷ்டத்யும்னன் அரசர்களின் நடுவில் வெளிபிட்டான். அநேக ராஜர்கள் அந்த தனுஸ்ஸை எடுக்கவோ வளைக்கவோ நாணேற்றவோ முடியாமற்போய் அவமானமடைந்தனர். அச்சபையில் பிராம்மணர்களின் நடுவில் உட்கார்ந்த பிராம்மண வேஷதாரிகளான பீமார்ஜுனர்கள் எழுந்து அந்த தனுஸ்ஸின் சமீபம் போய் நிற்கவும், கூடயிருந்த பிராம்மணர்கள் இதைக்கண்டு சந்தோஷத்துடன் ஆரவாரம் செய்யவும், முன் துருபதன் அர்ஜுனனை தன் மருமகனாய் அடைய விரும்பியதை அனுசரித்து, பீமசேனர் அர்ஜுனனை அந்த தனுஸ்ஸை எடுத்து நாணேற்றி மத்ஸ்ய யந்திரத்தை சேதிக்க ஆக்ஞையிடவும், அர்ஜுனன், ஸ்ரீஹரி வாயு இவர்களான ஸ்ரீகிருஷ்ணர் பீமசேனர் இவர்களை நமஸ்கரித்து தனுஸ்ஸை ஆரோபணம் செய்து லக்ஷ்யத்தை அடித்தான். துரௌபதி அர்ஜுனனின் கழுத்தில் சுயம்வர மாலிகையைப் போட்டாள். ஆகாயத்திலிருந்து உடனே புஷ்ப வர்ஷங்கள் வர்ஷித்தன. மாச்சரியங்கொண்டு சல்யன் கர்ணன் துரியோதனாதிகள் முதலியோர் யுத்தத்திற்கு வந்து சேரவும் பீமசேனர் பெரியதொரு மரத்தைப்பிடுங்கி எல்லா அரசர்களையும் விரட்டி சல்யனைத் தூக்கி ஆகாயத்தில் விட்டெறிந்து அவன் தாய் மாமன் என்ற விசுவாசத்தால் அவன் கீழே விழும் பொழுது அவனை 'தாங்கி கீழே இறக்கிவிட்டு துரியோதனாதிகளை விரட்டிவிட்டார். அர்ஜுனன் கர்ணனை பராஜயப்படுத்தினன். பிறகு பீமசேனரும் அர்ஜுனரும் துரௌபதியை அழைத்துக்கொண்டு அவர்கள் அவ்வூரில் இறங்கியிருந்த குயவன் வீட்டுக்கு வந்து சேர்ந்தனர். மகாபாரதம் கூறுவதாவது:— "கத்வா துபார்கவகர்மசாலாம் பார்த்தௌ பிருதாம் ப்ராப்ய மஹானுபாவௌ] தாம் யாக்ஞசேனீம் பரமப்ரதீதௌ பிக்ஷேத்யதாவேதயதாம் நராக்ர்யௌ" அவர்கள் தாயான குந்தியிடம் தான் பிக்ஷை கொண்டு வந்திருப்பதாய்ச் சொல்ல குந்தி தடபுடலாய்" அதை ஐவர்களும் சாப்பிடும்படி சொன்னாள். பிறகு திரும்பி பார்க்கையில் கன்னிகையான துரௌபதி இருந்ததைக் கண்டு தன் வார்த்தை ஸத்யமாக ஐவர்களும் அவளை விவாஹம் செய்து கொள்ளவேண்டுமென்று விரும்பினாள். மறுநாள் துருபதனும் அவர்கள் பாண்டவர்கள் என்று தெரிந்து கொண்டு சந்தோஷப்பட்டு அர்ஜுனனுக்காகத்தான் இந்த சுயம் வரம் நடத்தப்பட்டதால் தன் இஷ்டப்படியே நடந்ததென்றும் பாண்டவர்களில் யார் தன் பெண்ணை விவாஹம் செய்து கொண்டாலும் தனக்கு ஸம்மதமென்றும் அறிவிக்க, யுதிஷ்டிரர் தாம் ஐவர்களும் அவளை விவாஹம் செய்து கொள்வதாய்ச் சொன்னார். (தொடரும்.)



# ஆசாரமாலை.

(முன் 363-ம் பக்கம் தொடர்ச்சி.)

இதனாலும் சூரிய உதயத்திற்கு முன்பு செய்யப்பட்டதாய் ஏற்படுகிறது. ஹாரீதஸ்மிருதியில் மேலே கண்ட விதிப்படி நன்றாய் ஸ்நானம் செய்து, ஸந்தியாவந்தனம் செய்யவேண்டும்; ப்ராத: கால ஔபாஸனம் செய்து பித்ரு தேவதைகளுக்கு தர்பணம் செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டிருப்பதைக்கொண்டு பிரம்மயக்ஞ தர்பணம் காலையில் தான் என்று அந்தஸ்மிருதியும் அபிப்பிராயப்பட்டதாகும். வசிஷ்டரும் "காலையில் எழுந்து சுத்தனாய் ஸ்நானம் செய்து ப்ரயத்னபூர்வமாய் அர்க்யம் கொடுத்து சூரியோபஸ்தானம் செய்து ஜபம் செய்து ப்ரம்மயக்ஞம் செய்யவேண்டு" மென்று சொல்லியிருப்பதைக்கொண்டு, காலையில் ப்ரம்மயக்ஞம் செய்யவேண்டுமென்பது அவருடையவும் அபிப்பிராயமாகும். ப்ரம்மயக்ஞத்தின் முன் காயத்ரி ஜபம் செய்யப்படுகிறதே என்றால் பிரம்மயக்ஞம் செய்ய அதிகாரமுண்டாக காயத்ரியை முன்னாடி ஸக்கோசமாய் ஜபம் செய்யவேண்டுமென்று சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். சேஷதர்மத்தில், பிரம்மயக்ஞம் செய்ய அருகதை ஏற்பட காய்த்ரியை சங்கோசமாய் ஜபிக்கவேண்டும்; ஆனால் காயத்ரி ஜபத்தை பூர்ணமாய் பிரம்மயக்ஞத்திற்கு முன்பு செய்யலாகாது; அப்படிச் செய்தால் அது நிஷ்பலம்; என்று இந்த அபிப்பிராயம் விவரமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அபிப்பிராயங்கொண்டு தான் வியாஸஸ்மிருதியில், காயத்ரியை ஜபிக்காமல் ப்ரம்மயக்ஞத்தைச் செய்கிறவன் பிரம்மஹத்யையைச் செய்தவனாய் எல்லா ஸத்கர்மங்களினின்றும் விலக்கப்பட்டவனாய் ஆவான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் வராக புராணத்தில் அசக்தனாயிருப்பவன் தினம் வைச்வதேவத்திற்கு முன்னேயாவது அல்லது பின்னேயாவது பிரம்மயக்ஞத்தைச் செய்யவேண்டுமென்று ஸ்பஷ்டமாய் சொல்லியிருப்பதைக்

கொண்டு, மத்யானம் வைச்வதேவ ஸந்தர்பத்தில் பிரம்மயக்ஞம் செய்வது அசக்த விஷயமென்று ஸ்பஷ்டமாய் ஏற்படுகிறது. கௌதமரும் சுத்தனுயிருந்து ஸந்தியோபாஸனையைச் செய்யவேண்டும்; தேவரிஷி தர்பணங்களைச் செய்யவேண்டும்; சூரியோதயம் வரை நின்றிருந்து காயத்ரியை 108 தடவை ஜபிக்கவேண்டும் என்று சொல்லியிருப்பதால் ப்ரம்மயக்ஞத்தை சூரியோதயத்திற்கு முன்புதான் செய்யவேண்டுமென்பது அவருடைய அபிப்பிராயம். நாரதர் "இலங்கையில் சூரியோதயமாவதைக் கணக்கிட்டு பார்த்து அந்த கணக்கின்படி அர்க்யத்தைக் கொடுத்துவிட்டு ப்ரம்மயக்ஞாதிகளைச் செய்து சூரியோதயத்தை எதிர்பார்த்துக்கொண்டு நிற்கவேண்டு" மென்று அருணேதயத்திற்கு முன்பு ப்ரம்மயக்ஞம் செய்ய விதித்திருக்கிறார். ஸ்ரீபகவத்பாதாளின் அபிப்பிராயமும் இதுவேதான். லங்கோதய காலத்தில் ப்ரம்மயக்ஞம் செய்யவேண்டும்; தேவதர்பணத்திற்கு முன்போ அல்லது பின்போ பித்ருதர்பணம் செய்யவேண்டும் என்று தேவலர் ஸ்பஷ்டமாய் கூறுகிறார். ஸ்ரீவராக புராணத்திலும் இந்த அபிப்பிராயம் காணப்படுகிறது. யாக்ஞவல்க்யரும் ப்ராம்ம முகூர்த்தத்தில் எழுந்திருந்து சௌசம் செய்துகொண்டு இந்திரிய நிக்ரஹமுள்ளவனுய், ஆற்றுக்குச்சென்று விதியுக்தமாய் ஸ்நானம் செய்து, ஸந்தியாவந்தனுதி கிரியைகளை செய்து, விதிபூர்வமாய் பிரம்மயக்ஞம் தர்பணங்களைச் செய்யவேண்டும். பிறகு சூரியோதயத்தைப்பார்த்தபின் ஔபாஸனம் செய்யவேண்டும். லங்கோதயத்தைப் பார்த்தபிறகு ப்ரம்மயக்ஞம் தர்ப்பணம் செய்யவேண்டும். சூரியோதயத்தைப் பார்த்தபிறகு ஹோமத்தைச்செய்யவேண்டும் என்று பிரம்மயக்ஞத்தை லங்கோதய காலத்தில் விதித்திருக்கிறார். ப்ரம்மயக்ஞத்திற்கு பிறகு செய்யப்படும் பித்ரு தர்பணமும் காலையில் செய்யவேண்டுமென்று பிரமாணங்கள் அறிவிக்கின்றன. மகாபாரதம் அனுசாசனபர்வத்தில் சக்தியிருக்கும்பக்ஷத்தில் காலையில் அர்க்யத்திற்கு பிறகு பித்ரு தர்பணம் செய்யவேண்டும். அசக்தனுயிருந்தால் மத்யான்ஹத்தில் வைச்வதேவத்திற்கு முன்பு செய்யவேண்டும் அல்லது பின்பு செய்யலாம்: தேவாதி தர்பணங்களை சூரியோதயத்திற்கு முன்புதான் செய்யவேண்டும். மோக்ஷத்தில் ஆசையுள்ளவன் இதற்கு மாருக செய்யலாகாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. விஷ்ணு தர்மோத்தரத்திலேயும் அர்க்யத்திற்கு பிறகு பித்ருக்களை உத்தேசித்து மனுஷ்யர்கள் தர்ப்பணம் செய்யவேண்டும். பிறகு காயத்ரி ஜபம் செய்யவேண்டும். அதனுல் எல்லா யக்ஞங்கள் செய்த பலன் உண்டாகும்



என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த மேற்கூறிய பிரமாணங்களின் பலத்தால் ப்ரம்மயக்ஞத்தை காலையில் அர்க்ய ப்ரதானத்திற்கு பிறகு செய்யவேண்டும். அதுவே ஸ்ரீபகவத்பாதாளின் ஸம்மதமென்றும் ஏற்படுகிறது. காலையில் பிரம்மயக்ஞாதிகளைச் செய்து, ஹோமம் செய்யவேண்டும். காலையில் செய்தால்தான் பூர்ண பலன் ஏற்படும், இல்லாவிடில் பலன் குறைந்துவிடும் என்று காலவர் ப்ராத: காலத்திய ப்ரம்மயக்ஞத்திற்கு அதிக பலனைக் கூறுகிறார். ரிஷ்யசிருங்கரும் அசக்தன்தான் மத்யான்ஹ காலத்தில் நித்யகர்மங்களான தேவாதி தர்பணங்களைச் செய்யவேண்டும். ஸ்நானம், ப்ரம்மயக்ஞம், தேவாதி தர்பணம் இவை ப்ராத: காலத்தில் செய்யவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது; வைச்வதேவத்திற்குப் பிறகு செய்வது அமுக்யமான காரியமென்று ரிஷிகள் சொல்லியிருக்கின்றனரென்று கூறுகிறார். ஆகவே வைச்வதேவத்திற்குப் பிறகு ப்ரம்மயக்ஞத்திற்கு அமுக்யகாலமாகும். விஷ்ணு புராணத்திலேயும் அர்க்யத்தைக்கொடுத்து கேசவாதி பகவன் மூர்த்திகளுக்கு தர்பணம் கொடுத்து ஆசமனம் செய்யவேண்டும்; தேவர்கள் ரிஷிகளுக்கு தர்பணம் செய்து பிறகு காயத்ரியை ஜபிக்கவேண்டுமென்று ஸ்பஷ்டமாக கூறப்பட்டிருக்கிறது. அப்படி வைச்வதேவத்திற்குப் பிறகு ப்ரம்மயக்ஞ தர்பணத்திற்கு முக்ய காலமாயிருக்கும்பக்ஷத்தில் வைச்வதேவத்திற்கு பிறகு அமிர்தமென்றும், மத்யான்ஹத்தில் பயஸ் என்றும் ப்ராத: காலத்தில் ஜலமென்றும், ஜலத்திற்கு ஸ்மிருதிக்காரர்கள் பெயர்களைக் கொடுத்திருக்கக்கூடுமென்றும், வசனுத்ப்ரவிருத்தி: வசனுத் நிவிருத்தி: என்ற நியாயத்தின்படி வசனங்களைக்கொண்டு கர்மங்களை நடத்துவதும் நிறுத்துவதுமாகையால் மேற்கண்ட அநேக ஸ்மிருதி வசனங்களால் ப்ராத: காலத்தில்தான் ப்ரம்மயக்ஞத்தைச் செய்ய ஏற்படுகிறதென்றும் அதுவே ஸ்ரீபகவத்பாதாளின் ஸம்மதமென்றும், வைச்வதேவத்திற்கு பிறகு செய்யவேண்டுமென்று சொல்வது ஆக்ரஹமூலமாய் இருப்பதுடன் ஸ்ரீபகவத்பாதாளின் வசனங்களுக்கு த்ரோஹம் செய்வதாய் ஆகுமென்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

பிராம்மணன் தினம் பஞ்சயக்ஞத்தைச் செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அவையாவன, (1) தேவயக்ஞம் (2) பூதயக்ஞம் (3) பித்ருயக்ஞம்; (4) பிரம்மயக்ஞம் (5) மனுஷ்யயக்ஞம். ஔபாஸனுதிகள் யக்ஞத்தில் ஹோமம் செய்வது பூதயக்ஞமாகும். பித்ருக்களுக்கு தர்பணம் கொடுப்பது பித்ருயக்ஞம்; தான் அத்யயனம் செய்திருப்பதை அத்யயனம் செய்வது பிரம்மயக்ஞம்; மனுஷ்யர்

களுக்கு தானம் செய்வது மனுஷ்யயக்ஞம்; இந்த யக்ஞங்களின் கிரமத்தில் பிரம்மயக்ஞம் கடைசியில் சொல்லியிருந்தபோதிலும் அதை எல்லா யக்யங்களுக்கு முன்னாடி செய்யவேண்டுமென்று ஆசவாலய சூத்ரம் அறிவிக்கிறது.

பிரம்மயக்ஞத்தை இரவில் செய்யலாகாது. இரவு முதல் யாமம் வரையில் பகலில் செய்யவேண்டிய கர்மங்களை செய்யலாமென்ற விதி பிரம்ம யக்ஞத்தைத்தவிர்த்துதான். பிரம்மயக்ஞத்தை விட்டவன் பிரம்மஹத்தை செய்தவன் என்று மனு அறிவிக்கிறார். ப்ரம்மயக்ஞம் செய்யும் பொழுது புருஷ ஸூக்தத்தைச் சொல்லவேண்டும். அதனால் எல்லா வேதங்களையும் ஸாங்கோபாங்கமாய்ச் சொன்னதாய் ஆகும், என்று ஓர் ஸ்மிருதி அறிவிக்கிறது. ப்ரம்மசாரி காலை மாலை ஒவ்வொரு நாளும் அக்னிகார்யத்தையம் ப்ரம்ம யக்ஞம் தர்பணத்தையும் செய்ய வேண்டும். பித்ருதர்பணத்திற்கு ஸர்லக்ராம தீர்த்தம் சேர்த்தல் அவசியம்.

பிரம்மயக்ஞம் செய்யும் வகையாவது:— கைகால்களை அலம்பிக்கொள்ளவேண்டும். யஜுர்வேதிகளாய் இருந்தால் பிறகு இரண்டு தடவை ஆசமனம் செய்யவேண்டும். ரிக்வேதிகள் ஆசமனம் செய்யலாகாது. ச்ரோத்ராசமனம்தான் செய்யவேண்டும். தர்பாஸனத்தில் தர்பத்தை கையில் தரித்தவனாய் கிழக்குமுகமாகவோ வடக்குமுகமாகவோ உட்காரவேண்டும். யக்ஞோபவீதத்தை வழக்கப்படி வலது புறமேதரித்திருக்கவேண்டும். பிராணயாமம் செய்து பிரம்மயக்ஞத்தைச் செய்வதாய் ஸங்கல்பம் செய்து கொள்ளவேண்டும். இடது காலின்மீது வலது காலையும் இடது உள்ளங்கையின்மீது வலது உள்ளங்கையையும் வைத்துக்கொள்ளவேண்டும். கைகள் வாழைப் பூப்போல் கூப்பியிருக்கவேண்டும். இடது கை கட்டைவிரலை வலது கை கட்டைவிரலால் பிடித்து வலது கை ஆள்காட்டி விரல் முதலியவைகளை இடது கட்டைவிரல் ஆள்காட்டி விரல்களின் நடுவில் தர்பம் ஸ்ரீதுளசி இவைகளுடன் சேர்த்து குக்குடாஸனத்தில் அமர்ந்து வலதுமுழங்கால்மீது வைத்துக்கொள்ளவேண்டும். பிறகு வித்யுதஸி என்ற மந்திரத்தைச்சொல்லி ஜலத்தை ஸ்பரிசிக்க வேண்டும். மௌனமாய் ஆசமனம் செய்யவேண்டும். கட்டைவிரல் நுனியால் இருதரம் கீழ் உதட்டையும் உள்ளங்கையால் முகத்தையும் துடைத்துக்கொள்ளவேண்டும். வலது கையில் ஜலத்தை எடுத்து இடது கைகால்களை துடைத்துக்கொள்ளவேண்டும். இடது கையில் ஜலத்தை எடுத்து எல்லா விரல்களாலும் சிரஸ்ஸையும், கட்டைவிரல் பாம்பு விரல்களைக்கொண்டு இருகண்களையும், கட்டைவிரல், ஆள்காட்டி விரல்களைக்கொண்டு நாஸிகைத்வார புடங்களையும், கட்டைவிரல் பாம்புவிரல்களால் காதுகளையும் உள்ளங்கையால் ஹ்ருதயத்தையும் துடைத்துக்கொள்ளவேண்டும். (தொடரும்.)



# சங்கரலீலா விலாஸம்.

(முன் 302ம்பக்கம் தொடர்ச்சி)

மைசூர் மகாராஜா காலேஜ்லெக்சரர் ஸ்ரீமான் H. சுப்புராவ் எழுதுவதாவது:—

அந்த வைதீகனுக்கு மசால்வடை சாஸ்திரி என்று பெயர் ஏற்பட்டதுபோல் அத்வைத மதத்திற்கு ப்ரச்சன்ன பௌத்தமென்னும் பெயரை யாதவப்ரகாசாசாரியார், யாமுனாசாரியார், விக்ஞான பிக்ஷு, பாஸ்கராசாரியார் முதலான பண்டைகாலத்தினரே கொடுத்திருக்கின்றனர். மேலும் தன் பிள்ளையின் பத்னியை அந்த ப்ராம்மணன் ஓர் பாரசிக்கு ஒப்பிட்டதுபோல் அத்வைதிகள் பௌத்தமதத்தையோ அல்லது அதைப்போலொத்தமதத்தையோ நிர்துஷ்டமான வேதவாக்யங்கள் அறிவிக்கின்றனவென்று சொல்வதுகூட ப்ராம்மண மதத்திற்கு பெரும் மானக்கேடே ஆகும். அத்வைதிகளின் யோக வாசிஷ்டத்தில் சொல்லப்பட்டிருப்பதாவது :— "யதிதம் திருச்யதே கிஞ்சித் தன்னாஸ்தி கிமபித்ருவம்| யதா கந்தர்வநகரம் யதாவாரி மருஸ்தலே" ஆகவே இத்யாதி காரணங்களை விமரிசை செய்வதால் சங்கரபாஷியம் முதலான நூல்களுக்கு வியாக்யானம் செய்த அத்வைதிகள் ஆழ்ந்த யோசனையற்றவர்களென்று நன்கு நிச்சயிக்கலாம்.

## அனுபந்தம் III.

ஜகத்து பொய் என்னும் விஷயத்தில் தமக்கும் பௌத்தருக்கும் சிறிதும் வித்யாஸமில்லை என்று சங்கராசாரியாரே ஒப்புக்கொண்டிருக்கிறார். மேலும் கடைசி தத்வமான ஞான ஸ்வரூபத்திலும் கூட இவர்களில் பேதமில்லையென்று யுக்தியைக்கொண்டு நிச்சயமாகிறது. பௌத்தர்களின் கடைசி தத்வமான ஞானமும் அத்வைதிகளின் கடைசி தத்வமான ஞானமும் இரண்டும் நிர்விசேஷந்தான். பௌத்தர்கள் அந்த ஞான ஸ்வரூபத்தில் அது க்ஷணிகமென்ற தன்மையையோ

208717

அல்லது அத்வைதிகள் தம் க்ஞானஸ்வரூபத்தில் அது நித்யம் என்ற தன்மையையோ ஒப்புக்கொள்வதில்லை. இந்த இரண்டு மதங்களிலும் முடிவான தத்வம் நிர்தர்மகம் அதாவது எந்த தன்மையுமில்லாதது. ஆதலால்தான் பௌத்தர்களின் ஞானஸ்வரூபமும் ஒன்றேயாகிறது. அப்படி ஒன்றல்லவென்றும் பேதமிருப்பதாயும் அவர்கள் வாதிக்கவந்தால் பேதகமான தர்மங்களை ஒப்புக்கொள்ள நேர்ந்து, அது நிர்தர்மகமென்றதத்வத்திற்கே பங்கம் ஏற்படும்.

அத்வைத தத்வம் ப்ரச்சன்ன பௌத்தமதமென்னும் விஷயத்தில் யாமுனாசாரியார் ராமானுஜாசாரியர் விக்ஞான பிக்ஷு வல்லபாசாரியார் பாஸ்கராசாரியார் யாதவப்ரகாசர் முதலான ப்ராசீனர்கள் எல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். பத்மபுராணத்திலும் பிருஹத்ப்ரம்மஸம்ஹிதையிலும் கூறப்பட்டிருக்கும் விஷயமும் த்வைதசித்தாந்த விசாரமென்னும் நூலில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

ஸர் எஸ் ராதாகிருஷ்ணய்யரும் சொல்வதாவது:—

"That Goudapada gives us a Vedantic adaptation of the Buddhistic Sunyavada is supported by many scholors such as Jacobi, Doussin, Sukhtankar, and Vidusekhara Bhattacharya, Unfortunately Shankara explains away all obvious references to Buddhism."

## அத்வைத மதத்தின் பாஷியம் பிரம்மசூத்திரங்களுக்கு விரோதமானது.

மேலே சொன்னபடி கௌடபாதரும் சங்கராசாரியாரும் தாங்களாகவே கற்பித்துக்கொண்டதும், பரம்பரையாய் வந்திராததுமான ஐக்யவாதத்தை வேதங்களிலும் பிரம்ம சூத்திரங்களிலும் பகவத் கீதையிலும் நுழையவிடவேண்டுமென்று எத்தனித்தனர். வேதத்தில் இந்த ஐக்யவாதத்தைப் புகவிட



எத்தனித்ததைப்பற்றி முன்னடி நாம் நிரூபித்திருக்கிறோம். மேலும் பிரம்ம சூத்திரத்தின் கட்டையும் தளர விட்டு தன் ஐக்ய வாதத்தை அதில் புகவிட அவர் செய்த எத்தனத்தை இங்கு காட்டுகிறோம். சங்கராசாரியாரே ப்ரம்மஸூத்திரம் எல்லா இடங்களிலும் பேதத்தால் இருகக்கட்டப்பட்டு பேதிக்கமுடியாமல் காதால் கேட்க சஹிக்கமுடியாமல் இருப்பதாய் வாய் விட்டு கூறியிருக்கிறார்.

1. ப்ரதிபாத்யந்து சாஸ்திரார்த்தம் ஆத்மைகத்வமேவ தர்சயதி, சாஸ்திர திருஷ்ட்யா தூபதேசோ வாமதேவவத் முதலானவை; சங்கரபாஷியம்.

2. ஆனந்தகிரி டீகையாவது:— நனுஜீவப்ரம்மணோ; ஐக்யம் நக்வாபி ஸூத்ரகாரோ மூகதோவக்த்தி; கிந்து ஸர்வத்ர பேதமேவ; அதோனைக்யமிஷ்டம் தத்ராஹ ப்ரதிபாத்யம்து இதி. ஆதிபதம் ஆத்மேதிது உபகச்சந்தி இத்யாதி. ஸூத்ரார்த்தம்

இதன் தாத்பர்யமாவது:— ஜீவப்ரம்ம ஐக்யத்தை எந்த சூத்ரத்திலேயும் வாய்விட்டு சூத்ரகாரர் சொல்லவில்லை. ஆனால் பேதத்தைத்தான் ஸ்பஷ்டமாய் சொல்லியிருக்கிறார். ஆகவே ஐக்யமானது இந்த சாஸ்திரம் இயற்றியவரால் ஒப்புக்கொள்ளப் பட்டதல்ல என்.மிவ்வாறு பூர்வபக்ஷம் செய்தால் ஐக்யதத்வமானது சாஸ்திர திருஷ்ட்யா தூபதேசோ வாமதேவவத் என்ற முதல் அத்யாயத்தின் ஸூத்ரத்திலேயும், ஆத்மேதி தூபகச்சந்தி க்ராஹயந்திச என்ற நான்காவது அத்யாயத்தின் ஸூத்ரத்திலேயும் சொல்லப்பட்டிருக்கிறது என்கிறோம் என்றார்.

இதனால் இந்த இரண்டு மூன்று ஸூத்ரங்களின் கட்டு மட்டில் சிறிது தளர்ந்திருப்பதாயும் வேறு இடங்களில் தளர்த்திவிடவோ நிராகரிக்கவோ முடியவில்லை என்றும் சங்கராசாரியார் அறிவித்திருப்பதாய் ஏற்படுகிறது.

பேதவ்யபதேசாச்ச, பேதவ்யபதேசச்சான்ய; 'சாரீஸ் சோபயேபிஹி,பேதேனைமதீயதே,பிரதுருபதேசாத்தஇத்யாதி

இடங்களில் சூத்ரங்களை பயங்கரமான முடிச்சாக இருந்துவருகின்றன. சங்கராசாரியார் இம்மாதிரி இடங்களில் ஐக்யமாகிய மணியைக் கோர்க்க சிறிதும் இடமில்லையென்று ஒப்புக்கொள்ளவேண்டியதேயாகும்.

மேலும் அவர் பொருக்கி எடுத்திருக்கும் சாஸ்திரதிருஷ்ட்யாது, ஆத்மேதிது என்றஇரண்டு ஸூத்ரங்களிலேயும் ஐக்யப் பேச்சே இல்லை. இதற்கு சங்கராசாரியார் அபேத அர்த்தத்தைத் தன் இஷ்டப்படி கொடுப்பதாய் இருக்கும்பக்ஷத்தில் பேதபரமாகவே ஏன் அர்த்தத்தைக் கொடுக்கலாகாதென்று ஹரதீ ஆசாரியார் கேட்டகேள்வி பதிலன்னியில் நின்றுதான் இருக்கிறது. த்வைத ஸித்தாந்தசாரம் என்னும் நூலில் இந்த இரண்டு ஸூத்திரங்களுக்கும் பேதபரமாய் அர்த்தம் செய்வதில் யுக்திகளும் கூறப்பட்டிருக்கின்றன.

ஆயினும் இரங்க ஸ்தலத்தில் கேவலம் தர்மயுத்தத்தை மட்டில் செய்யமுடியாது. சத்ருவை எந்த உபாயம் செய்வதாவது மடக்கவேண்டுமென்று கலிங்க ப்ராம்மணனொருவன் பாரதத்தில் நீதி சொல்லியிருக்கிறான். அதன்படி தற்பொழுது ஸ்ரீவேதவியாஸருக்கும் சங்கராசாரியாருக்கும் புத்தியுத்தம் தொடங்கியிருக்கிறது. எல்லா பிரம்மஸூத்திரங்களையும் வேதமாகிய எஃகுத்தந்திகளால் கட்டி சங்கராசாரியாரின் ஐக்யத்தை வேதமாகிய ராஜகிருகத்தில் பிரவேசிக்க அவகாசமில்லாதபடி வேதவியாஸர் தடுத்தார். அதற்காக சங்கராசாரியார் கச்சைக் கட்டிக்கொண்டு ஸ்ரீவியாஸரை அவருடைய ஆசிரமத்திலேயே பல்டி போடும்படி செய்தார். உடனே வியாஸர் பேதபரமாய் செய்த பிரம்மஸூத்திரங்களுக்கு அபேதபரமாய் அர்த்தம் செய்துவிட்டார். இது அவருடைய புத்தி சாதுர்யமாகும். சங்கரவிஜயத்திலேயே இந்த அமோகமான சங்கராசாரியாரின் ஸாமர்த்தியம் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. "வ்யாஸோபதிஷ்டஸூத்ராணாம் த்வைதவாக்யாத்மனாம் சிவே| அத்வைதமேவ ஸூத்ரார்த்தம் ப்ராமாண்யேன கரிஷ்யதி || அவிமுக்தேஸமாஸீனம் வியாஸம் வாக்யைர்விஜிக்ய ச||" (தொடரும்.)



கும்பகோணம், 1934-௵ ஜூலை-௴ 20௳

எமது மித்திரனின்

# ஏழாவது வருட ஆரம்பம்.

ஸ்ரீராகவேந்திர குருஸ்வாமியின் ஆக்ஞையை சிரஸாவகித்து ஸ்ரீஆனந்ததீர்த்த பகவத்பாதாளின் மகாபாரத தாத்பர்ய நிர்ணயமாகிய அமிர்தத்தை ஆஸ்வாதனம் செய்துகொண்டு, ஸ்ரீஹரிகுருஸேவையில் ஈடுபட்டு, ஆத்யாத்மிகம் ஆதிதைவகம் ஆதிபௌதிக மென்ற தாபத்ரயங்களாலும் வருந்தியும் ஸ்ரீஹரிகுரு சரணங்களே முக்ய ஆசிரயனாய், ஸ்ரீபாதராயணமதமாகிய ஸ்ரீமத்வமதஸேவையிலேயே கருத்துள்ளவனாய், பலவகை ஆபத்துக்களினின்றும் அடிக்கடி தப்பிப்பிழைத்துக்கொண்டு, ஸ்ரீலட்சுமிநரஸிம்ஹனின் அருளால் இம்மித்திரன் தன் ஆறுவது வருஷத்தை முடித்துக்கொண்டு, ஏழாவது வருஷத்தை அடைந்துவிட்டான். ஸ்ரீமத்வரமணான ஸ்ரீனிவாஸன்தான், தன் வைஷ்ணர்களான எமது மாத்வ வகுப்பார்களை ப்ரேரிபித்து இம்மித்திரனிடம் பன்மடங்காய் அன்புகாட்டி இவனை விருத்திக்கு கொண்டுவரச்செய்ய வேண்டுமாய் பிரார்திக்கிறோம்.

## மகாலட்சுமி.

ஸ்ரீவாதிராஜஸ்வாமிகள் ஸரஸபாரதி என்னும் நூலில் ஸ்ரீப்ரிய விலாஸத்தில் சொல்வதாவது:—

மகாலட்சுமி, பிரம்மா, ஸரஸ்வதி, வாயுபகவான், பாரதி ஆகிய ஐவர்கள் பரனாகிய ஸ்ரீஹரியிடம் எந்தக்காரணத்தைக் கொண்டும், எந்தக்காலத்திலேயும் சஞ்சலமான புத்தியுள்ளவர்களன்று. ப்ரம்மாவும் வாயுவும் ஒரே யோகக்ஷேமமுள்ளவர்களாதலால்

ஒருவரென்றும், அவர்களின் பத்னிமார்களான ஸரஸ்வதியும் பாரதியும் அப்படியே ஒருவரென்றும் கருதப்பட்டு மகாலட்சுமி வாயு பாரதி மூவர்கள்தான் சுத்தர்களான தேவர்கள் என்று சொல்லப்பட்டிருக்கின்றனர். சுத்தமென்பதற்கு சுக்லமென்று வேறு பெயராகும். பரதத்வமாகிய ஸ்ரீஹரியிடம் சுத்தர்களாய் அதாவது கலியின் ஆவேசமில்லாதவர்களாய் இப்மூவர்களிருக்கின்றனரென்று பரசுக்லத்ரயமென்னும் பதத்தால் அறிவிக்கப்பட்டது. ஆதலால்தான் ஸ்ரீபகவத்பாதாள் பரசுக்லத்ரயமென்றார். மகாலட்சுமி பரம சுத்தமானவள். கலி ஆவேசமில்லாதவளென்று நாம் அதிகமாய் நிரூபிக்கவேண்டியதில்லை. அநாதி அநந்தகாலமாக அவள் ஜனனமரணமில்லாதவள். எப்பொழுதும் முக்தளானவள். அப்படியிருக்க அவளுடைய மனதில் பிரமம் முதலியவைகள் ஏது? தற்போதுள்ள பிரம்மாவைப்பெற்ற தாயாயும் இதற்கு முன் நடந்த பிரம்மகல்பத்திலேயுமிருந்தவளான ஸாக்ஷாத் மகாலட்சுமி இந்த பிரம்மாவின் ஒவ்வொரு நாளிலேயும் எப்படி பிறந்திருக்கமுடியும். ஆனால் க்ஷீரஸமுத்திரத்திலிருந்தும் அவள் பிறந்ததாய் சொல்லப்படுகிறாளே என்றால் அவளுடைய பர்த்தாவான ஸ்ரீஹரி கூர்மமாய் எப்படி பிறந்தாரோ அப்படி இவளும் மகாலட்சுமியாய் பிறந்தாள். ஹரி எப்படி நித்ய முக்தரோ அப்படித்தான் மகாலட்சுமியும் நித்ய முக்தள். தன் பர்த்தாவுடன் ஒத்துப்போகிறவள். முக்தியிலேயும் தோஷமிருக்கும்பக்ஷத்தில் முக்திக்காக யாராவது எத்தனிப்பார்களா? ஆகவே மகாலட்சுமி நித்ய முக்தாளாயிருப்பதைக் கொண்டே அவள் நித்யமும் அதாவது எக்காலத்திலும் தோஷமற்றவளே யாவாள். ப்ரளய காலத்திலேயும் தன் பர்த்தாவுடன் ப்ரளய ஜலத்தில் அவள் படுத்துக்கொள்ளுகிறாள். எல்லா ஜகத்திற்கும் ஸம்ஹார்த்தாவாயிருந்தபோதிலும் பகவான் அவளுக்கு பர்த்தாவாகத்தானிருக்கிறாரல்லவா? இவ்வாறு தனக்கு மஹோபகாரத்தைச் செய்பவராய் தன்னை போஷிக்கிறவராய் ஜகத்கர்த்தாவாய் யக்ஞபோக்தாவாய் சத்ருஸம்ஹாரகராயுள்ள அந்த ஸ்ரீஹரியை, அவரிடம் நித்யம் வாஞ்சையுள்ள அந்த மகாலட்சுமி எக்காலத்திலும் மீறி நடப்பதில்லை. அப்படி அவள் மீறி நடந்தால் அவளுக்கு தன் பர்த்தாவிடம் அனுராகமிருப்பதாய்



எப்படி ஏற்படும்? அவனை மீறி நடக்க சக்தியுள்ளவன் யாருமில்லை. சக்தியைத்தருபவள் அவளேயாதலால் அவள் தான் சக்தி எனப்படுகிறாள். ஆதலால் அவனை மீறி நடக்க சக்தியுள்ளவர் யாருமில்லை. கலி முதலான பிரபலமான அயோக்யர்களும்கூட ப்ரளயா அக்னியால் சுட்டுப்போகின்றனர். ப்ரளயத்திலேயும் லயமில்லாதவளான அந்த மகாலட்சமியை யார்தான் சஞ்சலபுத்தியுடையவளாய் செய்யமுடியும். சேஷசாயியான ஸ்ரீஹரியின் பாதாரவிந்தத்தை தன் மடியில் வைத்துக்கொண்டு யார் தினம் ஸேவித்துவருகிறாளோ, யார் தன் பர்த்தாவின் ஹிருதயத்தில் தினம் இருந்துவருகிறாளோ, நடுசபையிலும்கூட தன் பர்த்தாவின் மட்டில் படுத்திருக்கிறாளோ, பர்த்தா பூமியில் அவதரித்தாலும் அவருடனே தானும் பூமியில் அவதரிக்கிறாளோ, அங்கும் தன் பர்த்தா எந்த எந்த அஸுரனை கைவிடுகிறாரோ அவனவனையும் ஸம்பத்து ரூபமாகிய அந்த மகாலட்சுமி பூமிரூபியாய் கைவிட்டுவிடுகிறாளோ, பக்தவத்ஸலரான தன் பர்த்தா எந்த பக்தனை அனுக்ரஹம் செய்கிறாரோ அந்த பக்தனின் வீட்டில் ஸம்பத்து ரூபமாய் இருந்து அவனை அனுக்ரஹம் செய்கிறாளோ, இப்படி ஒருவருக்கொருவர் இணைபிரியாதிருந்துவரும் இந்த தம்பதிகளில் ஸதியான மகாலட்சுமியை மட்டில் எந்த அயோக்யன் மனம் கலங்கும்படி செய்வான். அநந்தாஸனம், சுவேதத்வீபம், வைகுண்டம் ஆகிய இந்த மூன்று ஸ்தானங்களில் ஸ்ரீஹரியின் விமானங்களாய் அவள் இருந்துகொண்டு முக்தி என்று அழைக்கப்படுகிறாள். அங்குள்ள முக்தனும் தோஷமற்றவனாகிறான். இவ்வாறு தன்னை அண்டியவர்களின் பிரமத்தை பேதிப்பவளின் புத்தியைபேதிக்க எந்த அஸுரன் தான் வல்லவன். "நயத்ரமாயா கிமுதாபரே ஹரே: அனுவ்ரதாயத்ர ஸுராஸுரார்சிதா, என்றார் சுகாசாரியார் ஸ்ரீமத் பாகவதத்தில். நாசமில்லாததான வைகுண்டலோகமாய் அந்த மகாலட்சுமியிருக்கும்பொழுது அவளுக்கு பிரமமென்பது ஏது? பர்த்தாவின் சரீரத்தை எப்பொழுதும் தழுவிக்கொண்டு, அவருடைய அநேக ஆபரணங்களாய் இருந்துகொண்டு மகாலட்சுமி மிக்க ஆனந்தப்படுகிறாள். ஆதலால் பிரம்மஸூத்திரக்காரரான ஸ்ரீவேதவியாஸர் அவளை ஸமனா என்றழைத்தார். ஸம:

நாயயாஸா அந்த மகாலட்சுமி என்று வ்யுத்பத்தியின்பேரில் பரம புருஷனை பகவான் யாரால் ஸமானனாய் செய்யப்பட்டிருக்கிறனோ என்று பொருள்படுகிறது. ஓம் ஸமனோ சா ஸிருத்யுபக்ரமாத் அமிருத்வம் சானுபோஷ்ய என்ற ஸூத்ரத்தில் தேசத்தாலும் காலத்தாலும் பகவானுக்கு ஸமானமாய் மகாலட்சுமிக்கு வியாபகத் தன்மை சொல்லப்பட்டிருக்க பகவானை விட்டு அவள் எப்படி பிரிந்திருக்கமுடியும். அஸுராரியான ஹரியின் பத்னி மகாலட்சுமி எப்பொழுதும் பரம சுத்தள்தான். இதரர்களான தேவர்களுக்காக அஸுரர்களை சேதிக்கும் ஹரியின் பத்னியை எந்த அஸுரன் தொடுவான். ஸகல ஜனங்களுக்கும் தாயான மகாலட்சுமி தன் ரமணனை ஸ்ரீஹரியை விட்டு தன் பிள்ளைகளாகிய இந்த ஜீவர்களை அபேக்ஷிப்பாளா? யோசித்துப்பார். (தொடரும்.)

## விசேஷ தினங்கள்.

### சிராவணமாஸம்.

| | | |
|---|---|---|
| 14—8—34 | மங்களவாரம் | நாகசதுர்த்தி, மங்கள கௌரீ விரதம். |
| 15—8—34 | புதவாரம் | நாகபஞ்சமி |
| 17—8—34 | சுக்ரவாரம் | ஸம்பத்சுக்ரவாரம். |
| 21—8—34 | மங்களவாரம் | ஏகாதசி உபவாஸம் |
| 22—8—34 | புதவாரம் | த்வாதசி, தயிர் விரதாரம்பம் ப்ரதோஷம். |
| 23—8—34 | குருவாரம் | சிரவணம். உப. விஷ்ணுப உப. ரிக்வேதி உபாகர்மம். |
| 24—8—34 | சுக்ரவாரம் | பௌர்ணமி. வரலக்ஷ்மி விரதம், யஜுர்வேதி உபாகர்மம். விஷ்ணுப. உப. |
| 25—8—34 | சனிவாரம். | காயத்ரி ஸஹஸ்ராவிருத்தி, ஜபம். |
| 26—8—34 | பானுவாரம் | ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் புண்யதினம் (இது 264 வது வருஷத்திய புண்யதினம்.) |
| 31—8—34 | சுக்ரவாரம் | கோகுலாஷ்டமி, பகலில் போஜனம் கூடாது இரவில் பூஜை |
| 1—9—34 | சனிவாரம். | ஸ்ரீவியாஸராஜ மடத்தார் வாதிராஜஸ்வாமிகள் சம்பிரதாயத்தார்களுக்கு காலையில் பாரணை. ஆத்யம் சவாரி வரகேடி இவர்களுக்கு மணி 4-28க்கு மேல்பாரணை. ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிமடத்தார் ஸ்ரீமுஷ்ணம் கௌலகி, பாண்டுரங்கி, இவர்களுக்கு இரவு மணி 9-4க்கு மேல் பாரணை. |
| 4—9—34 | மங்களவாரம் | ஏகாதசி உப. |
| 6—9—34 | குருவாரம் | ப்ரதோஷம். |
| 8—9—34 | சனிவாரம் | அமாவாசை தில தர்பணம். |

2-8717


## மாத்வமித்திரன் பிரசுரங்கள்.

ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் சரித்திரம்:—எந்த பாஷையிலுமே இதுவரை இம்மாதிரி விரிவாய் வெளியானதில்லை. ஸ்ரீராகவேந்திரர் செய்து காட்டிய திடுக்கிடும்படியான அநேக அரிய சம்பவங்கள் விஸ்தாரமாய் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதைப் படித்துக்கொண்டிருக்கும்பொழுதே ஸ்ரீராகவேந்திர குருஸ்வாமியிடம் சித்தம் பதிந்து பக்தி வளர்ந்து ஆனந்தக்கண்ணீர் பெருகி சரீரம் ரோமாஞ்சமாவதை ப்ரத்யக்ஷமாய் காண்போர் பலர். மேலும் பாலர், விருத்தர்வரை மாத்வர்கள் யாவராலும் தினம் உச்சரிக்கப்படும் ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம், சுலோகங்கள் தேவநாகரத்திலும், தமிழிலும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஏராளமாய் செலவடைந்து வருகிறபடியால் பிந்தி ஏமாறுகிறக்க தற்போது ஆர்டர் செய்யுங்கள். விலை அணா 0—8—0 தபாற்கூலி அணா 0—1—0.

ஸ்ரீராகவேந்திர ஸ்தோத்திரம்:— தேவநாகரத்திலும், தமிழிலும் சுலோகங்கள் அவைகளின் தமிழ் அர்த்தமும் விலை அணா 2 தபாற்கூலி 0—0—6.

ஸ்ரீவாயுஸ்துதி:—தேவநாகரத்தில் சுலோகங்களும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. வாயுஸ்துதியின் இன்னின்ன சுலோகங்களால் இன்னின்ன பலம் ஏற்படுமென்பதும் புனஸ்சரண விதானமும் காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 0—5—0 தபாற்கூலி அணா ஒன்று.

துவைதமத விளக்கம்:—ஸ்ரீமத்வமதத்தின் அநேக ப்ரமேயங்கள் ஸ்ரீமத்வாசாரியாரின் ஜீவியசரித்திரம் முதலியவை உள்ளது விலை அணா 2. தபாற்கூலி பைசா 6.

கும்பகோண மகாத்மியம்:—(தமிழ்) அணா 4. தபாற்கூலி பை 6.

துருவசரித்திர நாடகம்:— அணா 6. தபாற்கூலி அணா 0—1—0.

கீதாதத்வம்:— ஸ்ரீஉத்தராதிமடம் ஸ்வாமிகள் இயற்றி ஸ்ரீமான் ஆத்யம் பாகவதரங்கநாதாசாரியாரால் தமிழில் எழுதப்பட்டது. முதல் மூன்று சஞ்சிகைகள் சுமார் 225 பக்கங்கள் தற்போது தயார். இதர சஞ்சிகைகள் அவை வெளியானவுடன் இனமாய் புக்போஸ்ட்டில் அனுப்பப்படும். விலை 1-8-0 தபாற்கூலி 0-6-0. ஒரு ரூபாய்க்கு குறைந்து ஆர்டர் செய்கிறவர்கள் தபாற்கூலியைச் சேர்த்து கிரயத்தொகை போஸ்டேஜ் ஸ்டாம்பாய் அனுப்பப்படவேண்டும். *Certificate of Posting* பேரில் புஸ்தகங்கள் அனுப்பப்படும். புஸ்தகங்கள் கிடைக்காவிட்டால் இந்த ஆபீஸ் ஜவாப்தாரியல்ல.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

வருட சந்தா ரூ. 3 Regd. No. M. 2419


# டி. எஸ். ஆர்.

அண்டு

# கம்பெனி,

## கும்பகோணம்.

ஸ்தாபிதம் 1909 — தந்திவிலாஸம் "கோகுல்"

எங்கள் வாஸனாதிரவியசாலையில்
தயாரித்து விற்பனைக்குதயாராக
இருக்கும் ஸாமான்களின் விபரம்

| | |
|---|---|
| வாஸனைப்பாக்கு | பலகாய்கறி ஊர்காய்கள் |
| வாஸனைச்சுண்ணாம்பு | ரோஜாப்பூ குல்கந்து |
| வாஸனைப் புகையிலை | ஷர்பத் தினுசுகள் |
| ஸ்னானப்பவுடர் | கொப்பரைச்சீவல் |
| கேஸர் பவுடர் | கோகுல் கூந்தல் |
| அம்பர். அரகஜா | பற்பொடி [தைலம் |
| தசாங்கம் | ஊதுவத்திகள் |

ச ந் த னா தி த் தை ல ம்

அரைக்கீரைவிதைத் தைலம்.

மற்றும் அநேகவாஸனை சாமான்களும் கிடைக்கும்.

கேட்லாக்குக்கு எழுதுங்கள்


Printed at Sri Venkateswar Printing Works and
Published by Bhagavatha Ranganathachariar, Kumbakonam.